653

ஸர்வஜித் ௵
ஆனி ௴

ஸம்புடம் - 6
ஸஞ்சிகை - 6

653

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 JUN 1947
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை.

3L
Ω22ள24,N41
N47·6·6.
189234

June 1947
Vol. 6 No. 6

ஸ்ரீ :

விஷய ஸூசிகை

		பக்கம்.
1	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	
2	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	118
3	துளஸீ மாஹாத்ம்யம்	123
4	தர்ம ப்ராமாண்யம்	125
5	ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருத்தசாங்கம்	129
6	காமாஸிகாஷ்டகம்	
7	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	134

ஸ்ரீ :

அக்நிஷ்டோம மஹாயாகாநுஷ்டாநம்

நாளது ஸர்வஜித்வ்ஸு ஆனி 5உ (19-6-47) வியாழக்கிழமை முதல் ஐந்து தினங்களில், அடியேனுடைய தம்பி நாவல்பாக்கம் சிரஞ்சீவி ஸ்ரீ நாராயணசாரியரால் நாவல்பாக்கம் அக்ரஹாரத்தில் அக்நிஷ்டோமம் என்கிறமஹாயாகத்தினுல் எம்பெருமானை ஆராதிக்க, பகவத் பாகவத நியமநத்தையும் அநுக்ரஹத்தையும் முன்னிட்டு நிச்சயித்திருப்பதால், ஆஸ்திகர்கள் யாவரும் எழுந்தருளியிருந்து யதாசக்தி சரீரத்தாலும் த்ரவ்யத்தாலும் ஸஹாயம் செய்து ஷை மஹாயாகத்தை நடத்தி வைத்து ஸ்ரீயக்ஞவராஹனுடைய க்ருபைக்குப் பாத்ரமாகும்படிப் ப்ரார்த்திக்கிறேன்.

தே. வரததேசிக தாதாசார்யர்.

ஸ்ரீ :

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

ஸர்வஜித் வ்ஸு ஆடி (கடக) மீ.

1உ	வியாழக்கிழமை	ஆடிப் பண்டிகை: சூந்ய திதி, ஸர்வ அமாவாஸ்யை: (தர்ப்பணம்)
2உ	வெள்ளிக்கிழமை	கடக சுக்ல ப்ரதமா திதி
5உ	திங்கட்கிழமை	திருவாடிப்பூரம்
12உ	திங்கட்கிழமை	ஸர்வ ஏகாதசி
16உ	வெள்ளிக்கிழமை	(த்விதீயாதி) உபாகர்மம்
17உ	சனிக்கிழமை	கடக க்ருஷ்ண ப்ரதமை ; ப்ரதம உபாகர்மக்காரர்கள் உட்பட எல்லார்க்கும் காயத்ரீ ஜபம்
18உ	ஞாயிற்றுக்கிழமை	,, த்விதீயை 18-ம் பெருக்கு
19உ	திங்கட்கிழமை	,, த்ருதீயை
20உ	செவ்வாய்க்கிழமை	,, சதுர்தசி
21உ	புதன்கிழமை	,, பஞ்சமீ
22உ	வியாழக்கிமை	,, ஷஷ்டி
23உ	வெள்ளிக்கிழமை	ஸப்தமீ
27உ	செவ்வாய்கிழமை	ஸ்மார்த்த ஏகாதசி
28உ	புதன்கிழமை	வைஷ்ணவ ஏகாதசி வ்ரதம்
30உ	வெள்ளிக்கிழமை	கடக க்ருஷ்ண சதுர்த்தசி
31உ	சனிக்கிழமை	கடக அமாவாஸ்யை திதி

[குறிப்பு:—ஆடி ஆவணி புரட்டாசி மாஸங்கள் தோஷ துஷ்டங்களாயிருப்பதால், ப்ரதம உபாகர்மம்] ஆனி மாஸத்திலேயே செய்யப்படவேண்டும். த்விதீயாதி உபாகர்மங்கள் ஆடிமீ செய்யப்படவேண்டும். மறுநாள் காயத்ரீ ஜபம்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 6	ஸர்வஜித் ௵ ஆனி ௴	ஸஞ்சிகை 6

"𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌃 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤 𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥"

——:o:——

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

——::o::——

18923 4

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[6-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L.,
அட்வோகேட், திருச்சி.]

விவேகன்:—[ஹர்ஷத்துடன் பக்தியால் மெய் சிலிர்த்து]

“ நிரஞ்ஜநமயம் ஜந: கிமபி நேத்ரமுந்மீலயந்
நமஸ்யதி ஶடத்விஷே நரகவைரிஜீவாதவே ।
ஸமஸ்தஜநிநிர்பராஸ்ரயஸமர்திகாஸோதர
ஸ்வலக்ஷணஸரஸ்வதீரஸஸரித்ஸ்ரியா ஸூநவே ॥ ”

விவேக மஹாராஜர் இந்த ச்லோகத்தால் ஆழ்வாருக்குத் தமது நமஸ்காரத்தை விஜ்ஞாபிக்கிறார். ஶடங்களான நம்மை ஏமாற்றிக் குமைக்கும் இந்த்ரியங்களை அடக்கி, அவற்றை நம் வசப்படுத்துபவர் ஆழ்வாரும் அவர் ப்ரபந்தங்களுமே. ‘நரக நாஶன்’ ‘நரகவைரி’ என்று பகவானுக்குப் பெயர். நரகத்தில் விழுந்தழுந்தவே உலகம் ஸர்வ காலமும் உத்யதமா யிருக்கிறது. ஆழ்வார் பாடியருளிய ப்ரபந்தங்களை ஸேவிப்பதால், கூட்டங் கூட்டமாய் ஜநங்கள் முக்தி பெறவும், நரகம் க்ஷீணிக்கவும் நேர்ந்திருக்கிறது. இதற்கென்றே பகவான் ஆழ்வாரை அவதரிப்பித்து அவர் முகமாக ப்ரபந்தங்களைப் பாடுவித்தான். இவரால் தான் பகவானுக்கு ‘நரக நாஶன்’ என்ற பெயர் ஜீவிக்கிறது. விச்வம் முழுவதையும் உஜ்ஜீவிப்பித்து வீடு சேர்த்துத் தம்முடைய அவா பூர்ணமாக வேண்டியதற்கு இந்த ஆழ்வார் தான் ஸஹாயம். ‘ஜீவாதுர்ஜீவநௌஷதி:’. ஜீவர்களை உஜ்ஜீவிப்பிக்கும் ஸஞ்ஜீவநௌஷதி இவர். தன்னுயிர் போல் அபிமான விஷயமான தன் ப்ரஜைகளான ஜீவர்கள் அஸத்கல்பராய் வ்யபகத ப்ராணரா யிருப்பவரை, ஆழ்வார் இந்த ஜ்ஞாநௌஷதத்தால் உண்மையில் ஜீவராக்கித் தகப்பன் வீடு சேர்ப்பிப்பவர். ‘நிரஞ்ஜநம்’—யாதொரு யோக ஸித்தமான அஞ்ஜந மையென்னும் உபகரண மில்லாமல் ‘பஹுவிதாஹார ஶுத்தி ப்ரபூர்வகாக’ என்றபடி அஷ்டாங்கயோக க்லேஶத்தால்—அந்த யோக மென்னும் அஞ்ஜந மையின் பலத்தால்—ஞானக் கண் திறப்பதென்கிற கஷ்டமில்லாமல், ஸுலபமாக—அக்லேஶமாக—இன்ப வெள்ளமான இத்தமிழ் மறையை இன்புற்று அநுபவித்துக்கொண்டு, ஆழ்வார் திருவடிகளை ஸ்பரித்துக் கொண்டு அந்நமஸ்கார பலத்தால் ஞானக் கண் திறந்து, ப்ரத்யக் தத்வமான பகவான் ப்ரத்யக்ஷாநுபவ விஷயமாவார். யோக மை யில்லாமலே ஞானக்கண் திறப்பதற்காக, இந்த சடகோபதாஸன் நரகஶத்ருவுக்கு ஜீவாதுவான சடகோபனுக்கு நமஸ்கரிக்கிறான். இவர் ப்ரபந்தம் ஸாரஸ்வத ஸாரம்; இவர் ஸரஸ்வதி ஸ்வலக்ஷணம். தனக்கு உவமை தானே. மற்றொன்று இதற்கு உவமை யாகாது. அன்றியும் இவர் பாசுரம்

தன் திருநாமத்தின் அங்கநத்தையும், தன்னுடைய பரிபூர்ண ஶாந்தி பக்தி ரஸங்களின் பூர்த்தியையும் தாங்கியிருப்பது. ஶாந்தி ரஸமே மூர்த்தீகரித்தவர் இவர். இவர் திருமார்பில் விளங்குவது வாடாத மணமிகு மகிழ் மாலை. 'ஊரூகாநாம் ஸஹஸ்ரம்' என்று வாக்கை வர்ணிப்பர். ஸௌரபியாக கந்தம் கமழும் ஸரஸ்வதீ. இவர் ஸரஸ்வதியின் கந்தம் வாடுவதே யில்லை. இவர் ஹ்ருதயத்தில் தரிக்கும் மகிழ் மாலை, இவர் நெஞ்சில் உதித்த ஸரஸ்வதியில் வாடா மணத்தை ஸூசிப்பது. 'மகிழ் மாலை—மகிழ்ச்சி மாலை. 'நாட்கமழ் மகிழ் மாலை மார்பினன்' என்று இவரே அருளியிருப்பதை ஸ்வாமி இங்கே ஸூசிக்கிறா ரென்பதை, மஹாமஹோபாத்யாய ஸ்ரீ சேட்லூர் ஸ்வாமியின் உரை காட்டிற்று. இவர் ஸ்ரீ ஸூக்தியின் குளிர்ச்சி எப்படி? அது 'தண் பொருநல்' என்று பாடும் தாம்ரபர்ணீ நதியின் தெளிந்த அழகிய அலைகளைப் போல் குளிர்ச்சியுடையது. இந்நதி நீரின் குளிர்ச்சிதான் இம்மறையில் புகுந்ததோ? இந்நதிக் கரையில் ப்ரவஹித்த தமிழ் மறையின் குளிர்ச்சிதான் இந்நதியில் புகுந்ததோ? உபமேயோபமையே என்பதை வ்யஞ்ஜநம் செய்கிறார். இரண்டு குளிர்ந்த ப்ரவாஹங்களும் ஒரே அகஸ்த்ய கிரியிலிருந்து உத்பந்நமாய் ஓடிவருகின்றன. அதனால் இரண்டும் ஸோதரம். 'நிம்நகா' என்பதற்கு, 'பள்ளத்தில் ஓடிவரும்' என்றும், 'தாழ்ந்தவர்களுக்கும் யோக்யமாகிப் பயன்படுவது' என்றும் பொருள். எல்லோருக்கும் உதவுவது இது. 'கும்பஸம்பவ' என்ற அகஸ்த்யத் திருநாமத்தால் 'ஸாக்ஷாத் கும்பஸம்பவ ப்ரணீதா' என்றபடி, அம்மாமுனியால் ப்ரவர்த்திக்கப்பட்ட சிறப்பைத் தமிழ்ப் பாஷை பெற்றதென்பதைக் காட்டுகிறது.

தர்க்கன்:—மஹாராஜரே! இங்கே மற்றுமொன்றைப் பார்க்கவேணும்.

"அஹோ வஸ்த்ர வர்ஷாஸ்ரும் க்ஷிதிஹ்ரு தாகும்பயதோ ஹரே:
ஸஞ்ஜீவநாதகா ஸாதிஷ்டிதம் ஸத்யகீர்ணம் ஸம்வத் ।
ஸ்ரீ தத்த்வ நந்தஸுவாஹமியதவ் ப்ரயாகோபாடவீ
ஶாவா தாவித ஸஹ்ய வஸ்து தஸ்ய யாயாஸ ஸம்ஸ்தது ॥"

தமிழ் நாடாகிய பாண்ட்ய நாட்டின் ராஜதாநி அருகிலுள்ள சோலைமலையும், அங்குக் கோயில் கொண்டருளியுள்ள ஸுந்தர பாஹுவும், ஆழ்வாருக்கு ப்ராண பூதம். ஆழ்வாருடைய த்ராவிட கவிதையை ஸாரஸ்வத ஸாரமென்று ப்ரஶம்ஸித்தார். அந்த ஸுந்தர கவிதையில் முக்யமான பங்கு அழகருக்குண்டு. திருமாலிருஞ்சோலை வஞ்சக் கள்வன் மாயக் கவியாய் வந்து இவர் நெஞ்சுள்ளும் உயிருள்ளும் கலந்து, நெஞ்சு முயிரு மவையுண்டு தானேயாகி நிறைந்து, தானே ஆழ்வா ரென்பாராகித் தன்னைத் தானே துதித்து, இவரை முற்று முயிருண்டு, பண்ணார் பாட லின்கவிகள் இவராய்த் தன்னைத் தான் பாடித் தென்னா வென்று, இவர் ப்ரபந்த முடிவில் இம்மலைப் பெருமாள் தன் உள்ளிருந்து பாடி அளித்த காவ்ய மென்று அறுதியிட்டார்.

"மாலேயேறி மாலருளால் மன்னு குருகூர்ச் சடகோபன்
பாலேய் தமிழ ரிசைகாரர் பத்தர் பரவு மாயிரத்தின்
பாலேபட்ட"

என்று முதல் சதகத்தில் பாடியதிலும், இம்மாலிருஞ் சோலைப் பெருமாள் நினைப்பே யென்றும் சொல்லலாம். பாலும் மாயமும் பர மாயனும் அருளும் நிறைந்த பாசுரம் அது. தமிழ்க் கவிதையை வளர்க்கப் போகிற மதுரைமா நகர் அருகில் மலைச் சோலை அழகப் பெருமாள் 'வந்தே கவீ நாராயணம்' என்று பின் காவ்யங்களுக்கு மூலாதாரமாக ராமாயண மென்னும் ஆதி காவ்யம் அவதரித்தது போல, இந்த ப்ராசீநத் தமிழ்க் காவ்யத்தைத் தான் உள்ளே யிருந்து இவர் முகமாகப் பாடி வைத்தான் போலும். 'ஸ்ருதீநாம் தத்த்வமந்தேந' என்று ஆழ்வார் ப்ரபந்த குணத்தைப் பற்றிப் பாடிய மஹிமையும் இந்த 'செஞ் சொற் கவிகாள்' திருவாய்மொழியில் நிரப்பிக் கிடக்கிறது. அவனுள்ளே ஆவே சித்துப் பூர்ணமாக வ்யாபித்து, இவர் அஹங்காரத்துக்குள் 'தானுங்காரமாய்ப் புக்குத் தானே யிவரே யானன்' என்று ப்ரத்யக் தத்வத்தைத் தெளிவாக விளக்கினர். 'யானே நீயாகி யென்னை யளித்தானே' என்பதால், 'யானுகை நீ ஆகா விடில் எனக்கு ஸத்தை ஏது? நானேது?' என்றும் விளக்குகிருர். 'தென் கொடி சைக்குத் திலதமாய் நின்ற' என்று பாடியதை இந்த ச்லோகத்தில் 'சுப்ர' 'சுப்ரதீம' 'சுப்ரே' 'ஸாவத' முதலிய ச்ரேஷ்டவாசக சப்தங்களால் ஸூசிக்கிருர். இப்பெருமாளை அநுபவிக்கக் 'கிளரொளி யிளமை' வேணும். 'யுவா ஸுவாஸா: பரிவீத ஆகாத்'. இவர் 'வளரொளி மாயோன்'. வளரிளம் பொழில் சூழ்ந்தது இவரது இருஞ்சோலை. 'தளர்விலராகி இவரைச் சார்வது சதிர்'. 'முடிச் சோதி, முகச் சோதி, அடிச் சோதி, படிச் சோதி, கடிச் சோதி, பரஞ்சோதி' என்று இவர் சோதியநுபவம். 'சுப்ர' பதத்தைத் திருப்பித் திருப்பிப் படிப்பதாலும் இதையெல்லாம் ஸூசிக்கிருர். இந்தச் சிறிய மலையை 'க்ஷிதிதர சாஸ்த்ரீம' [மலைகளில் முதன்மையானது] என்று கூறலாமோ? 'ஸ்தாவராணாம் ஹிமாலய:' என்று கீதையில் பாடியது பொய்யோ என்று ஆக்ஷேபம் வரும்.

"யத்ப்ரேக்ஷ ஹரே: பதஜீரோதிக்ஷதாஸமுதி உந்நதிம் உதாஸீநோஸ்ய வத்ஸு ॥"

என்பதால் அந்த ஆக்ஷேபத்தைப் பரிஹரிக்கிருர். ஹிமவானுடைய உச்சியில், அவர் ஶிரஸ்ஸில் கங்கை ப்ரவஹித்து, அதை ஶிரஸ்ஸால் தாங்குவதால் அவருக்கு ஏற்றம். அந்தக் கங்கையும் பகவானுடைய திருவடியில் உதித்தது. 'ஸ்ரோதஸாமஸ்மி ஜாஹ்நவீ' என்று கீதையில் முதன்மையாகப் புகழப்பட்டது. இந்த மலை சிறியதாயினும், பகவானுடைய பாதச் சிலம்பிலிருந்து ப்ரவஹிக்கும் நூபுர கங்கையை ஶிரஸ்ஸால் வஹிப்பதால், இவருக்கும் ஹிமாலயத்தைப் போன்ற ச்ரைஷ்ட்ய முண்டென்று ஸமாதாநம். மஹத்தான மந்தாகிநியின் பெருமையையும், அதன் கங்கா நாமத்தையும் வஹிக்கும் நூபுரகங்கா ஜரியை வஹிக்கும் பெருமை. இந்த உதக தாரைகளில் வேறு அம்ருத தாரைகளும் விழுந்து கூடி, அதனல் அதிக மஹிமையுடைய தென்பதைப் பின் பாதியில் வர்ணிக்கிருர். 'மதிதவழ் குடுமி மாலிருஞ் சோலை' என்று 'சந்த்ரன் தன் முழங் காலால் சங்க்ரமணம் செய்யும் சிகரத்தையுடைய மலையாக ஆழ்வார் வர்ணித்த

த்தையும் நினைக்கிறார். 'குடுமி' என்பதற்கு, 'சந்தநாதி வ்ருக்ஷங்கள் நிறைந்த சிகரம்' என்று பொருள் கூறுவது பொருந்தும். குடுமி (சிகை) யுள்ள குடுமி (சிகரம்). 'சூடா' என்பதற்கு, 'குடுமி', 'சிகை' என்பது பொருள். 'சூடாடவீ' என்பதற்கு 'உச்சியிலுள்ள சோலை' என்பது பொருள். அந்தச் சோலை வ்ருக்ஷங்களின் கிளைகள், சந்த்ரனை மோதி, அதனால் அம்ருத கிரணனாகிய சந்த்ரனிடமிருந்து அம்ருத தாரைகள் விழுந்து, அதனால் நூபுரகங்கை நீர் அதிகப் பெருக்கத்தை உடையதாயிருக்கிறது. சந்தந வ்ருக்ஷங்கள் இருக்கின்றன. காற்றில் அந்த வ்ருக்ஷங்கள் ஆடுகின்றன. அம்மரங்கள் ஆடிக்கொண்டு ஸந்தோஷமாக நர்த்தநம் செய்வனபோல் இருக்கின்றன. ஆடும் சந்தந மரங்களில் படுங் காற்று சந்தந கந்தத்தை வஹநம் செய்துகொண்டு வீசுகையில், மற்றைச் சோலை மரங்களும் ஆடுகின்றன. மாலிருஞ்சோலை மலைச் சோலைகள் இப்படி மாலேறி இன்புற்று நர்த்தநம் செய்கின்றன. இந்தச் சந்தநக் காற்றும், சந்த்ரனிடமிருந்தும் இழிந்து விழும் அம்ருத தாரைகளும் விழுவதால், இந்த நூபுரகங்கைக்கு கங்கையிலும் ஏற்றம் அதிகம்.

விவேகர்:—இச் சோலை மலைப் பெருமாளின் க்ருபை எங்கே பார்த்தாலும் ப்ரவஹித்துக்கொண் டிருக்கிறது. இங்கே பகவானுடைய தயை விஷயமாகத் தயாஶதகத்தில்,

" [illegible] "

என்னும் ச்லோகத்தைப் படிக்கிறார். தென்திசைத் திலகமான இப்மலை இத் திவ்ய தேஶத்திலும் வடமாமலை திவ்ய தேஶத்திலும் அபேத புத்தி. 'கிளரொளியும்' 'முடிச் சோதி'யும் பாடின உடனே 'ஒழிவில் காலமெல்லாம்' என்ற திருவேங்கடத் திருவாய்மொழி பாடப்பட்டது.

' திருமாலிருஞ் சோலைமலையே திருப்பாற் கடலே யென்தலையே
திருமால் வைகுந்தமே தண் திருவேங்கடமே '

என்று ஆழ்வாருடைய ஏக ரூபாநுபவத்தை இங்கே ஸ்வாமியும் அநுஸரிக்கிறார்.

[தென் திக்கில் நேத்ரங்களைச் செலுத்தி]

" [illegible] ।
[illegible] ॥ "

என்று பகவானுடைய கருணையை வர்ணித்தார். தயாஶதகத்தில் ஒன்பதாவது தஶகத்தில், கருணையால் செய்யப்பட்ட அவதாரங்களை வர்ணிக்கையில், கருணையே விக்ரஹமாய் அவதரித்த ராமனுடைய கருணா காஷ்டையான ஸேது நிர்மாணத்தை வர்ணித்தார்.

' [illegible] '

என்று ஆளவந்தார் வர்ணித்தார். தன் இலங்கைச் சிறைவாஸம் தீர்க்க உபயோகப் பட்டதுமல்ல; தர்ஶநமாத்ரத்தால் தன் குழந்தைகளின் ப்ரஹ்மஹத்யாதி பாபங்களைப் போக்குமே என்பதனால், இந்த ஸேது நிர்மாணத்தில் ஸீதையின் திருவுள்ளம் மிகவும் உவந்ததென்று. ஆளவந்தார் திருவுள்ளம். ஸேது

வின் பெருமைகளை ஸூசிக்கிறார். விச்வகர்மாவின் அம்சம் நளன். வானர ஸைந்யங்கள் வேண்டு மென்பதற்காகவே இந்த்ராதி தேவர்கள், தங்கள் அம்சங்களாக வானரர்களைப் பிறப்பித்தார்கள். விச்வகர்மாவின் அம்சமான புத்ரன் நளன். ஸைந்யத்துக்கு அக்கரை செல்ல ஸமுத்ரத்தில் பாலம் கட்டும் வேலைக்காக விச்வகர்மாவின் அம்சமாக அவன் பிறந்தான். அவன் கையினாலேயே பெரிய பெரிய மலைப்பாறைகளை வைத்துக் கட்டிய அணை. சம்பள மில்லாமல் கேவலம் ராம கைங்கர்யமாக இப்பாலக் கட்டட வேலை செய்யப்பட்டது. 'விஶ்வகர்மாத்மஜ ஶ்ரீமாந் நளோ நாம மஹாகபி:' என்று பாலகாண்டம் 17-வது ஸர்க்கத்தில் கூறப்பட்டது. ஸமுத்ரராஜன், 'இந்த நளன் விச்வகர்மாவின் புத்ரன்; இவன் தகப்பனார் இவனுக்கு வர மளித்திருக்கிறார்; இவன் ஸமுத்ரத்துக்குள் பாலம் கட்டட்டும்' என்று விண்ணப்பித்தான். பர்வதாகாரரான வானரர், பல பர்வதங்களுக்கு ஓடிப் பர்வத கண்டங்களைப் பெயர்த்துத் தூக்கி வந்தார்கள். ஹிமவாந் மந்தரம் முதலிய மலைகளின் பாறைகளையும் கொண்டு வந்தார்கள். 'ஆஸேது ஹிமாசலம்' என்று ஸிந்துதேசப் பரப்பிற்கு எல்லை கட்டுவர். ஹிமவத் பர்வதப் பாறைகளும் இந்தத் தென்கோடி அணையில் வைக்கப்பட்டிருக்கின்றன. வேலை செய்த வானரர்களுக்கும் கூலி கிடையாது. எல்லாரும் ராமப்ரேமையால் ஸ்வயம் ப்ரயோஜநமான கைங்கர்யமாக ச்ரத்தா பக்திகளுடன் பணி செய்து கட்டியது. என்ன தூய்மை! இப்படி உலகத்தில் ஒரு கட்டடமும் கட்டப்பட்டிராது. 'அம்ருதஸ்யைஷ ஸேது:' என்று உபநிஷத் படித்தபடி, அம்ருதஸேதுவான ராமன் அமைத்துவைத்த ஸேது. 'ஹரிசரணசரண ஸஹிஷ்ணு' என்று இப்பாலத்தின் கெட்டியை வர்ணிக்கிறார். பர்வதாகாரரான வானர ஸைந்யங்கள் வேகமாகக் குதித்துக்கொண்டு நடந்தபோதிலும், பாலம் சிறிதுகூடக் குலையவில்லை. 'ஸஹஸ்ர பதநாதஸ்வந த்ரு(த்)ருஷ்டம்' என்று ஸேதுவைக் கொண்டாடுவார்கள். 'ஹரிசரணம்' என்பது, பகவத் தாஸரான வானர ஸேநா சக்ரத்தின் பாதக்ரமணங்களையும் சொல்லும்; ராமனுடைய சக்ராதி ரேகைகளுடைய திருவடி அங்கநங்களையும் சொல்லும். 'ஸஹிஷ்ணு'—த்ரேதாயுகத்தில் கட்டிய ஸேது இன்னும் சிதில மாகவில்லை. ஸமுத்ரத்தின் ஓயாத அலைகளாலும் கெடவில்லை. ஸமுத்ரத்தின் ஊர்மிகளின் ஓயாத தொடர்ச்சியைத் தடுத்துத் தேக்கிக்கொண்டிருக்கிறது. 'ஊர்மிஷட்கம்' என்பது ஊர்மி ஷட்கமென்னும் ஸம்ஸாரத் துயரங்களையும் சொல்லும். ஸம்ஸாரத் துயரங்களின் கணங்களைத் தடுத்து நீக்குகிறது. இங்கே இப்பாறைகளின்பேரில் ஸமுத்ரம் மோதிக்கொண்டேயிருப்பதால், ஓயாத அலை சப்தம் தபஸ் ஸமாதிக்கு யோக்யமல்ல. ரதத்தை வடக்கே திருப்பி ஓட்டவேணும். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேசிகாய நம:

துளஸீ மாஹாத்ம்யம்

[ஸ்ரீ. உப. கே. ஸுதர்ஶநாசார்யர், தமிழ்ப் பண்டிதர், சைதாப்பேட்டை.]

ஒரு க்ராமத்தில் மாதவன் என்னும் ப்ராஹ்மணன் ஒருவன் தன் குலத்துக்குரிய ஆசார சீலங்கள் அற்றவனாய் க்ருஷித் தொழில் செய்துகொண்டிருந்தான். அவன் தினந்தோறும் வநத்திற்கும் வயல் வெளிக்கும் சென்று, தன் வீட்டு மாடுகளுக்குப் புல் கொண்டுவருவது வழக்கம். ஒருநாள் மாதவன் புல்லைப் பிடுங்கி வைத்துவிட்டு, அங்குப் பக்கத்தில் செழிப்பாய் வளர்ந்திருந்த துளஸிச் செடியைக் கண்டு, அதன் ப்ரபாவத்தை அறியாமல், “இவைகளை வீட்டுக்குக் கொண்டுபோய், மாட்டுக்கேனும் மனிதனுக்கேனும் இது உபயோகப்படுமா என்பதை விசாரித் தறியலாம்” என்றெண்ணிச் சில செடிகளைப் பிடுங்கிக்கொண்டான். இதற்குள், இவனது துஷ்கர்மாக்களின் பலத்தால் இவனது ஆயுள் காலம் குறுகினமையால், ம்ருத்யுவால் ஏவப்பட்ட ஸர்ப்பம் ஒன்று திருத்துழாய் ப்ரபாவத்தால் இவனை அணுக முடியாமல், துளஸி இல்லாத ஸமயம் பார்த்து இவனைக் கடிக்க எண்ணிப் புற் சுமையில் பதுங்கி யிருந்தது. வழக்கம் போல் புற்சுமையைத் தலையில் எடுத்துக்கொண்டு தன் வீடு நோக்கி வந்துகொண்டிருந்தான் மாதவன்.

இவன் வீட்டுப் பக்கத்தில் மதுஸூதநன் என்னும் ஒரு ப்ராஹ்மணன் இருந்தான். அவன் ஸாங்க வேதாத்யயந பரன்; பகவதாராதந ஔபாஸந வைச்வதேவாதி ஸம்ஸ்காரங்களைத் தத்தத் காலங்களில் லோபமில்லாமல் செய்து வருபவன். அந்த ப்ராஹ்மணோத்தமன் இவன் தலைச் சுமைக்குள் பாம்பிருப்பதையும், இவனை யம தூதர் பற்றி வருவதையும் தனது யோக மஹிமையால் அறிந்து, அவர்களிடம் ஸங்கதிகளை விசதமாக விசாரிக்கலானான். அப்போது கிங்கரர்கள் இவனைக் கொண்டு போகத் தாங்கள் வந்திருப்பதாயும், திருத்துழாய்க்கு அஞ்சி இவன் உயிரைக் கவரத் தாமதிப்பதாயும், அது இல்லாத ஸமயம் பார்த்து இவன் உயிரைக் கொண்டுபோவதாயும் அறிவித்தார்கள். இதைக் கேட்ட மதுஸூதநன் வருத்த முற்று ‘இவனை இவ்வாபத்தினின்றும் நீக்கும் வழி என்ன?’ என்று கிங்கரர்களை ப்ரச்நம் பண்ண, அவர்கள், ‘நீ துளஸி அர்ச்சனை செய்து பகவதாராதநம் பண்ணின பலனைத் தந்தால் இவனது துயரம் நீங்கும்’ என மொழிந்தனர். பரோபகார சிந்தையுள்ள ப்ராஹ்மணோத்தமனும், நம்பாடுவான் ப்ரஹ்ம ரக்ஷஸ்ஸுக்குக் கைஶிகம் என்னும் பண்ணின் பலனைத் தந்து அவனை உத்தரிப்பித்தது போல் தன் ஸுக்ருதத்தைக் கொடுத்து ப்ராஹ்மணனை ரக்ஷித்தான். மாதவனும் நடந்த வரலாற்றையும் துளஸியின் மஹிமையையும் மதுஸூதநன் மூலமாய்த் தெரிந்துகொண்டு, தினந்தோறும் தவறாது பகவானைத் துளஸீ தளங்களால் அர்ச்சித்து ஆராதித்து நல்ல கதி அடைந்தான். இது நாரத புராணத்திற் சொல்லப்பட்ட கதை.

பாத்ம புராணத்திற் கூறப்பட்டுள்ள கதை வருமாறு :—ஒரு ஸமயம் நாரதர் த்வாரகையில் ஸத்யபாமையின் க்ருஹத்துக்கு எழுந்தருளினர். ஸத்ய பாமை அவரைப் பலபடி உபசரித்து, "ஸ்வாமி! எனக்கு ஒரு பொழுதும் க்ருஷ்ணனுடைய பிரிவு வராம லிருப்பதற்கு என்ன மார்க்கம்? அருளுக" எனக் கேட்டாள். அதற்கு நாரதர், "பாமா! கொடுக்காதவனுக்கு ஒன்றும் கிடைக்காது; எதைக் கொடுக்கிறேமோ அது எப்போதும் கிடைக்கும்" என்றார். உடனே பாமை, கண்ணனை நாரதருக்குத் தானம் செய்ய, நாரதரும் மகிழ்ச்சியுடனே கண்ணனை அழைத்துச் செல்ல முயன்றார். அது கண்டு ஸத்யபாமை, 'முனிவரே! இந்த லோகத்திலேயே கண்ணனை என்னிட மிருந்து பிரித்து விட்டீரே! பரலோக விஷயம் கேட்க வேண்டாம்' என்றாள். நாரதர், "பாமா! அப்படியானல் ஒன்று செய். இவரளவு த்ரவ்யம் கொடுத்துவிடு. இவரை விட்டு விட்டுப் போகிறேன்" என்றார். முனிவரது மொழிப்படியே ஸத்யபாமை தராசில் த்ரவ்யங்களையும் க்ருஷ்ணனையும் வைத்து நிறுத்தாள். எத்தனை வைத்தும் தராசுத் தட்டுக்கள் ஸமமாகவில்லை. க்ருஷ்ணனது நியமனத் தினல் திருத்துழாய்த் தளம் ஒன்றை வைத்தாள். அப்போது தட்டு ஸமமாகி விட்டது. நாரதர் அதைப் பெற்றுக்கொண்டு ஸந்தோஷமாகச் சென்றார்.

நாரதர் சென்றதும் ஸத்யபாமை கண்ணனைக் கட்டிக்கொண்டு, "அஹோ! என்ன எனது பாக்யம்! இப்படி யோகிகளாலும் அடைய முடியாத உங்களைப் பிறர்க்குத் தானம் செய்யும்படி விதேயனுகப் பெற்றேன்; தேவ தருவான பாரிஜாதத்தைப் பூலோகத்தில் கொணரப் பெற்றேன்; முன் ஜன்மத்தில் என்ன ஸுக்ருதம் செய்தேனே? அதைத் தாங்கள் சொல்லவேண்டும். அதனைத் தெரிந்துகொண்டு அதனைத் திரும்பவும் அநுஷ்டித்து உமது நித்ய யோகத்தை அடையக் கடவேன்" என்றாள். பகவானும், "ப்ரியே! அவ்ரஹஸ்யத்தைச் சொல்லுகிறேன் கேள்.

முன்னொரு காலத்தில் மாயாபுரி என்னும் பட்டணத்தில் தேவசர்மா என்னும் ப்ராஹ்மணன் தர்மாநுஷ்டானம் தவருமல் ஸூர்யனை உபாஸித்து வந்தான். காலக்ரமத்தில் அந்த ஸூர்யபகவான் அநுக்ரஹத்தினல் அந்த ப்ராஹ்மணனுக்குக் குணவதி என்ற புத்ரி தோன்றினள். நாளடைவில் அக் குழந்தை தன் பெயருக்குத் தக்கபடி நற்குண நற்செய்கைகள் வாய்க்கப் பெற்று நல்ல ரூபவதியாய் விளங்கினள். அக் கந்நிகையை, அந்த ப்ராஹ்மணன், தன்னிடம் வேதாப்யாஸம் செய்துவந்த சந்த்ரன் என்பவனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்து, தன் க்ருஹத்திலேயே அவனையும் வைத்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் அவர்கள் இருவரும் தர்ப்பை ஸமித்துக்கள் கொய்துவரக் காட்டிற்குச் சென்றிருக்கையில், அங்கு ஓர் அரக்கனல் கொல்லப் பட்டு இருவரும் மரண மடைந்தனர். கணவரும் தந்தையும் இறந்த செய்தியை அறிந்த குணவதியும், அவர்கட்குச் செய்யவேண்டிய சடங்குகளை க்ரமப்படி நடத்திவிட்டு, தான் கைம்மையை மேற்கொண்டு, திவ்யதேச யாத்ரை தீர்த்தாடனம் உபவாஸம் முதலியவற்றைச் செய்துகொண்டு, பகவானிடம் ஏகாக்ர சித்தையாயிருந்து காலங் கழித்துவந்தாள். ஒருநாள் அவள் கங்கையில் நீராடும்

போது முதலையால் விழுங்கப்பட்டு உயிர் துறந்தாள். வைகுண்டவாஸியான நான், தேவர்களால் ப்ரார்த்திக்கப்பட்டுப் பூபாரம் தீர்க்கக் கண்ணனாய் அவதரித்தேன். அப்போது எனது கணங்கள் யாதவர்களாய்ப் பிறந்தார்கள். பாமா! நீயே அக்குணவதி. எந்தக் கர்மங்களிலும் நீ என்னையே ஆராதித்துவந்ததால், நான் உனக்கு இவ்வளவு பவ்யமான பதியானேன். எனது ஆலய வாசலில் துளஸித் தோட்டம் வைத்தும், தீபங்களேற்றியும், மற்றும் பல பணிகளையும் செய்துவந்ததால், இப்பாரிஜாதம் வானுலகத்தினின்றும் உன்னிடம் வரலாயிற்று. அஷ்ட லக்ஷ்மியும் உன் க்ருஹத்தில் இருக்கிறார்கள். இம்மாதிரி செய்பவர்களுக்கு ஸர்வ மங்களங்களும் நிச்சயம் உண்டாகும்" என்று பகவான் ஸத்யபாமைக்கு அருளிச்செய்தார்.

[தொடரும்]

தமிழ்நாடு ... 189234 ...

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

தர்ம ப்ராமாண்யம்

ஸ்ரீ. உப. சி. மா. வேங்கடராகவாசார்ய ஸ்வாமி, சிரோமணி,
[ஸ்ரீ கார்யம்–ஏஜண்ட், ஸ்ரீ அஹோபிலமடம் கத்வால் ஸம்ஸ்தாநம், ஹைதராபாத் ஸ்டேட்.]

தர்மத்துக்கு ப்ரமாணபூதமா யிருப்பது வேதம். இவ்விஷயத்தை, "யஸ்ய நி:ஶ்வஸிதம் வேதா:" என்று வேதமே கொண்டாடியிருக்கிறது. இதை மநு "வேதோ(அ)கிலோ தர்மமூலம் ஸ்ம்ருதிஶீலே ச தத்விதாம் । ஆசாரஶ்சைவ ஸாதூநாம் ஆத்மநஸ்துஷ்டிரேவ ச" என்று உரைத்திருக்கிறார். அதன் வ்யாக்யாந ரூபமான இதிஹாஸ புராணங்களால் வேதத்தின் அர்த்தத்தை நன்கு அறிந்தவர்களுடைய ஸ்ம்ருதிகளும் ஶீலமும் நமக்கு ப்ரமாணம்.

இவைகளுள், "ஶ்ருதிஸ்து வேதோ விஜ்ஞேயோ தர்மஶாஸ்த்ரம் து வை ஸ்ம்ருதி:" என்று சொல்லப்பட்டதும், "ஶ்ருதிஸ்ம்ருதீ மமைவாஜ்ஞா யஸ்தே உல்லங்க்ய வர்ததே। ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ" என்று பகவானால் சொல்லப்பட்டதும் ஸம்ருதிகள். இவை, மநுஸ்ம்ருதி யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி பராஶர ஸ்ம்ருதி முதலிய பல வகைப்படும். ராக த்வேஷாதிகள் இல்லாத பவித்ரமான சரித்ரம் ஶீலமாகும். இதுவும் தர்மத்துக்கு ப்ரமாண பூதமே. ச்ருதிக்கு விரோத மில்லாத கங்கண பந்தம் முதலானவை ஆசார மாகும்.

இங்கு ஸாதுக்களுடைய ஆசாரம் தான் க்ரஹிக்கத் தக்கது. ஏனென்றால், வேதத்தில் அவச்யம் செய்யவேண்டு மென்று விதிக்கப்பட்டதும், சரீராவஸாந மளவும் விடாமல் செய்யவேண்டியதாய்ச் சொல்லப்பட்டதுமான வர்ணாச்ரம தர்மத்தை விடாமல் அநுஷ்டித்து வரும் புருஷனால்தான் பகவான் த்ருப்தியடைகிறான். அவனை த்ருப்தி செய்வதற்கு இதைத் தவிர வேறு உபாயம் கிடையாது. இப்படிப்பட்ட வர்ணாச்ரம தர்மத்தை யதாவத்தாக அநுஷ்டிப்பவர்களே ஸாதுக்கள். இத்தகைய ஸாதுக்களுடைய ஆசாரம்தான்

ப்ரமாணம். இதற்கு மாறாக, ச்ருதி ஸ்ம்ருதி புராணங்களைத் திரஸ்கரித்துத் தங்களுடைய யுக்தியாலே கல்பிதமான சில அம்ஸங்களால் தங்களுக்குள்ள அதிகாரங்களை ப்ரகடித்துக்கொண்டு ஜனங்களுக்கு ஒருவித லாபகர மில்லாத பஞ்சமாலய ப்ரவேஸம் ஸகோத்ர விவாஹம் முதலியவற்றை விதித்து, அவற்றை அநுஷ்டானத்தில் கொணரச் செய்து, நிஜமான ஸநாதநிகளுடைய மநஸ்ஸைப் புண்படுத்துமவர்கள் ஸாதுக்க ளல்லர்.

'ஸ்ரீ நஸுஷிரெவ' என்பது, ஸாஸ்த்ரத்தை விகல்பமாக அநுஷ்டிப்பதற்கு ஸம்மதியைக் கொடுத்திருக்கும் விஷயங்களில், தனக்கு ஹிதமாயும் ஸுலப ஸாத்யமாயுமுள்ள வஸ்துவால் அந்தக் கர்மாநுஷ்டானம் செய்தல் என்பதைக் குறிக்கும். இது எங்ஙனே யென்னில்:

"வ்ரீஹிபிர்வா யஜேத" "யவைர்வா யஜேத" "அதிராத்ரே ஷோடஸிநம் க்ருஹ்ணாதி நாதிராத்ரே ஷோடஸிநம் க்ருஹ்ணாதி"

என்கிற இடங்களில் நெல்லைக் கொண்டோ, யவ மென்னும் தான்ய விஸேஷத்தைக் கொண்டோ ஹோமம் செய்து யாக பூர்த்தி செய்யலாமென்று இரண்டு வாக்யங்கள் உள்ளன. நமக்கு எது ஸுலப ஸாத்யமோ அதைக் கொண்டு யாகம் செய்யலாம். இவ்விரண்டில், ஒரு சாஸ்த்ரத்தை அநுஷ்டாநம் செய்தால் மற்றொன்றுக்கு அநநுஷ்டான லக்ஷணமான அப்ராமாண்யம் கிடையாது. இங்கு, அதிராத்ர மென்கிற ஸோம ஸம்ஸ்தையில் ஷோடசி க்ரஹம் ஸ்வீகரித்தாலும் ஸ்வீகரிக்கலாம்; அல்லது ஸ்வீகரிக்காமலு மிருக்கலாம். இது விகல்பமான சாஸ்த்ரம். இங்கு நம்முடைய இஷ்டமே ப்ரமாணம். இப்படிப்பட்ட ஸாதுக்களுடைய ஆசாரமே சிஷ்டாசாரம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் ஸாதுக்கள் சிஷ்டர்கள் எனப்படுவர். இந்த ஸாதுக்களே 'பரித்ராணாய' முதலிய இடங்களிலும் சொல்லப்படுகிறார்கள். இப்படிப்பட்ட ஸாதுக்கள் ப்ரஹ்லாத வஸிஷ்ட ஸுக ஸௌநகாதி மஹநீயர்களே. யாஜ்ஞவல்க்யர் சிஷ்டர்களுடைய லக்ஷணத்தை.

"யஜ்ஞாயிதிஹாஸ பெஸுரா வேதஸ்ஸ பரிப்ரும்ஹணஃ।
தே ஸிஷ்டா ப்ராஹ்மணா ஜ்ஞேயாஃ ஸ்ருதிவஸூத்யக்ஷ ஹேதவஃ॥"

[இதிஹாஸ புராணங்களில் விச்வாஸ முள்ளவர்களாய், அவைகளுடைய அபேக்ஷையுடன் வேதத்தின் உட்பொருளை அறிந்தவர்களான ப்ராஹ்மணர்களே சிஷ்டர்கள்] என்று சொல்லியிருக்கிறார். ஆதலால், 'வேதம் மாத்ரமே ப்ரமாணம்; அதிலும் சில வேதமே ப்ரமாணம்; இதிஹாஸ புராணங்கள் ஆதரிக்கத் தக்கவையல்ல' என்று சொல்லிக்கொண்டு, வேதத்தில் தமக்கு வேண்டிய அம்ஸங்களை மட்டும் ஸ்வீரித்துக்கொண்டு, தமக்கு வேண்டாத மற்றவைகளைத் தோஷமாக க்ரஹிப்போர் சிஷ்டர்க ளல்லர் என்பது ஏற்படுகின்றது. இங்கு 'இதிஹாஸ புராணாப்யாம்' என்கிற வசநம் ப்ரமாணம். இதிஹாஸ புராணங்களால் வேதத்திற்கு அர்த்தம் சொல்ல முயல்வானாகில், அவன் ஸம்பூர்ணாதிகாரி. 'விஷயங்களைக் கொஞ்சமாகத் தெரிந்து கொண்டு தாறுமாறாக நம்மை அறிந்தானானால் அநர்த்தம் தான் நேரிடும்' என்று ச்ருதியே சொல்லுகிறது.

முன்னோர்களிடத்தில் காணப்படும் சில தர்ம வ்யத்யாஸங்களை எடுத்துரைக்க ஸங்குசித ஜ்ஞாநவான்களான நமக்கு அதிகார மில்லை. அதைத் தோஷ மென்றே நாம் எண்ணக்கூடாது. தபஸ்ஸின் ப்ரபாவத்தால் அத்தகைய் தோஷம் அவர்களை அணுகாது. இவ்வர்த்தத்தைக் கௌதமர் ஆபஸ்தம்பர் வ்யாஸர் முதலியோர் பரக்கக் கூறியிருக்கின்றனர். ச்ருதியில் சொல்லப்படாத விஷயங்களில் ப்ராஹ்மணருடைய வசநமே ப்ரமாண மென்று சொல்லப்பட்டிருக்கிறது. எந்தத் தர்மமானது நாராயணனை ஆச்ரயித்திருக்கிறதோ, எந்தத் தர்மமானது ஸ்ரீமந் நாராயணனால் சொல்லப்பட்டதோ, எந்தத் தர்மத்தாலே பகவான் ப்ரஸந்நனாய் நம்மை அநுக்ரஹிப்பானோ, அந்தத் தர்மமே லோகத்துக்கு க்ஷேமத்தை உண்டு பண்ணக் கூடிய தர்மம் என்று சொல்லப்பட்டுள்ள படியால், பகவானுடைய முகாரவிந்தத்திலிருந்து வெளிக் கிளம்பிய கீதை ஸ்ரீ பாஞ்சராத்ரம் முழுவதையும் உபதேசித்தவன் ஸாக்ஷாத் நாராயணனே என்று சொல்லுகிறது. அத்தகைய மஹிமை வாய்ந்த பாஞ்சராத்ர சாஸ்த்ரமும், பகவானால் கொண்டாடப்பட்ட ச்ருதியும் ஸ்ம்ருதியும் ஸாதாசாரமும் தான் நமக்கு ப்ரமாணம்.

இப்படி ச்ருதி ஸ்ம்ருதி பாஞ்சராத்ரம் முதலானவைகளுக்கு ப்ராமாண்யம் அவ்யாஹதமாக இருக்கும்போது, தத்காலம் சில மிதஜ்ஞர்கள் இவைகளுக்கு ப்ராமாண்யத்தை அங்கீகாரம் செய்யாமல், தான் தோன்றியாகத் தமக்குத் தோன்றியபடி யெல்லாம் ஶாஸ்த்ரங்களுக்கு அர்த்தத்தைச் சொல்லிக் கொண்டு பிறரை வஞ்சிக்கும் சில முள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். அவர்கள் வசநங்களைப் புத்திமான்களான ஆஸ்திகர் ஆதரிக்கமாட்டார்க ளென்பது திண்ணம். இவ்விஷயம், .

" 𑌵𑍇𑌦𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌯𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑌚𑌨𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑍍 ।
𑌯𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌨 𑌭𑌵𑍇𑌤𑍍𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌕𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌚𑌨𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌮𑍍 ॥ ".

[வேதங்களும், ஸ்ம்ருதிகளும், தர்மத்தோடு கூடியதும் அர்த்தத்தோடு கூடியதுமான வாக்யமும், ப்ரமாணம். இப்படிப்பட்ட ப்ரமாணங்கள் எவனுக்கு ப்ரமாணங்க ளாகமாட்டாவோ (அதாவது: எவன் இந்த ப்ரமாணங்களை ஒப்புக்கொள்ளமாட்டானோ) அவனுடைய வாக்யம் எப்படி ப்ரமாணமாகும்? அவனுடைய சொற்கள் ஆதரிக்கத்தக்கவை யல்ல] என்று மநு ஸ்ம்ருதியிலும்,

": 𑌅𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌾 𑌬𑌹𑌿𑌶𑍍𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾 𑌯𑍇 𑌚𑌾𑌨𑍍𑌯𑍇 𑌵𑍇𑌦𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌾𑌃 ।
𑌯𑌦𑍍𑌬𑍍𑌰𑍂𑌯𑍁𑌃 𑌨 𑌤𑌤𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌵𑍇𑌦𑌾𑌦𑍍𑌧𑌰𑍍𑌮𑍋 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥ "

[பூர்வோத்தர மீமாம்ஸா சாஸ்த்ர விசாரம் தெரியாதவர்களும், சாஸ்த்ரத்தை விட்டு யதேச்சையாகப் பேசுகிறவர்களும், வேதத்தை ஒத்துக் கொள்ளாமல் கேவல யுக்தியால் வாதம் செய்கிறவர்களும் எதை விதிப்பார்களோ அதை ஆசரிக்கக்கூடாது; ஏனென்றால்: வேதத்தினா லல்லவோ தர்மம் விதிக்கப்படுகிறது.] என்று வருண ஸ்ம்ருதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

வேதங்களாலே கொண்டாடப்பட்ட மஹிமை வாய்ந்த பராஶரர் மநு யாஜ்ஞவல்க்யர் முதலான ரிஷிகளுடைய தர்ம ஶாஸ்த்ரங்களே இப்பொழுது பாச்சாத்யர்களால் ஆங்க்ல பாஷையில் மொழி பெயர்க்கப்பட்டும், அம்

மஹர்ஷிகளுடைய ஸூக்தி ரத்நங்கள் மிகவும் கொண்டாடப்பட்டும், அவற்றின் வ்யாக்யான ரூபமான குல்லூக பட்டீயம் முதலான அநேக க்ரந்தங்கள் சட்டமாக ஏற்படுத்தப்பட்டும் விளங்குகின்றன. 'வவித்ரும் விஷ்ணுஷாம்ஹி வாகு:' 'வாஹஸ்யைவா நூயாவதி' என்றல்லவோ பண்டிதர்களான பூர்வீகர்களுடைய மஹிமை இருப்பது? நம் முன்னோர்கள் தர்ம நிர்ணயத்தைத் தான் தோன்றியாக ஒருவரே செய்யவில்லை. தர்மத்தின் கதியானது மிகவும் ஸூக்ஷ்மமானது. ஆகையால், மிகவும் தெரிந்தவனாக இருப்பினும், ஒருவனே தர்ம நிர்ணயம் செய்யக்கூடாதென்று நினைத்து, அநேகர் ஒன்று சேர்ந்தே ச்ருதி ஸ்ம்ருத்யாதிகளை ஆவாபோத்வாபம் செய்து தர்மத்தை நிர்ணயித்தார்கள்.

தர்ம நிர்ணயம் செய்வதில் 'அ த்வாரோவெஷயஜ்ஞா' என்று தொடங்கி, யாஜ்ஞ வல்க்யர் பர்ஷத்தை ஏற்பாடு செய்திருக்கிறார். கடைசியாக 'ஸகொவா யதா தவித்தூ:' என்று அத்யாத்ம சாஸ்த்ரம் தெரிந்த ஒருவன் தர்ம நிர்ணயம் செய்ய வல்லவன் என்று சொல்லியிருக்கிறார்.

இப்படி சாஸ்த்ர மர்யாதை இருக்கும்போது, தத்காலம் மேதாவிகளான சிலர், இந்த சாஸ்த்ரங்கள் நம்பத்தக்கவையல்லவென்றும், காலாநுகுணமாக சாஸ்த்ரங்களை ஸௌகர்யப்படி மாற்றிக் கொள்ளலாம் என்றும் சொல்லிக்கொண்டு, ஸநாதநிகளான மஹான்களுடைய அபிப்ராயத்தைக் கலந்து கொள்ளாமல், ஸ்வதந்த்ரமாக, ரஜஸ்வலா விவாஹம், ஸகோத்ர விவாஹம், பெண்களுக்குத் தாய பாகம் முதலிய விஷயங்களைச் சட்டமாகச் செய்து சாஸ்த்ரத்தையே நம்பிய ஸாதுகளான ஸநாதநிகளுக்கு மனவருத்தத்தை உண்டு பண்ணுகிறார்களே! ஐயோ பாபம்! இவர்களுக்குப் பகவானே கதி.

உலகத்தில் கீதையைக் கொண்டாடாத மனிதனே இல்லை. கீதாசார்யன் என்ன சொல்லுகிறான் என்பதைப் பார்ப்போம். "எவன் சாஸ்த்ர பத்ததியை விட்டுத் தான் தோன்றியாக வர்த்திப்பானோ அவன் ஸித்தியைப் பெறமாட்டான்; அதுமாத்ர மன்றியில் அவன் ஸுகத்தையும் மோக்ஷத்தையும் அடையமாட்டான்; ஆகையால் சாஸ்த்ரமே உனக்கு ப்ரமாணம்; சாஸ்த்ரம் சொன்னபடி நீ வர்த்திக்க வேண்டும்" என்று சொல்லி யிருக்கிறான். சாஸ்தீதி சாஸநம்—எது விதிக்கிறதோ அது சாஸ்த்ரம். உலகில் பொதுவாகப் பிள்ளைகளுக்குத் தாயானவள் ப்ரியத்தைச் செய்பவள் என்றும், தந்தை ஹிதத்தைச் செய்பவன் என்றும் சொல்லுவது வழக்கம். சாஸ்த்ரமோ வென்றால் ப்ரியத்தையும் ஹிதத்தையும் ஒரு சேரச் சொல்ல வல்லது. ஆயிரம் தாய் தந்தையரைக் காட்டிலும் ப்ரஜைகளிடம் அதிக வாத்ஸல்ய முடையது. ஆகையால் அப்படிப்பட்ட சாஸ்த்ரம், அவர்களுக்கு அசக்யமாய் அவர்களால் செய்ய முடியாத கார்யத்தை விதிக்காது. கரும்புக்காகப் பாய்ச்சப்படும் ஜலமானது, மார்க்க மத்யத்திலுள்ள புல் செடி கொடி முதலானவைகளுக்கும் பாய்ந்து அவற்றையும் போஷிப்பதுபோல், தர்ம மார்க்கத்தை விடாமல் தர்மாநுஷ்டானம் செய்து வரும் புருஷன் யசஸ் தநம் முதலான இஷ்டங்களையும் அடைவானென்று ப்ரமாணம் கூறுகிறது.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் திருத்தசாங்கம்

[திருப்பூந்துருத்தி. ஸ்ரீ. உப. V. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மாம்பலம்]

அவதாரிகை—காவ்யங்கள் ஸர்வோத்க்ருஷ்டமான நாயகனை ப்ரதிபாதிப்பதாக இருந்தால்மட்டுமே சிறப்புடைத்தாம். இப்படிப்பட்ட நாயகனுடைய பெருமைகளை முக்யமாகச் சொல்லி, உலாப்புறம் முதலிய ப்ரபந்தங்களில் இவை பத்தும் கூறப்பட வேண்டும் என்று விதித்துள்ளார்கள். இந்தப் பத்து அங்கங்கள் நாயகனுடைய நாமம், நாடு, நகரம், ஆறு, மலை, ஊர்தி, படை, முரசம், தார், கொடி என்பனவாம். கீழ்வரும் பாசுரங்களில் 'ராஜாதிராஜஸர்வேஷாம்' என்னக்கடவனாகிய ஸ்ரீமதஹோபில லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திருத்தசாங்கம் கூறப்படுகிறது.

1. திருநாமம்

மாறில்லாத் தன்னருளான் மாநீர்ப் புவிவந்து
வீறுடனே சிங்கமலை வீற்றிருந்தான்—கூறு
முறையெல்லாந் தன்னை யொருவனையே சொல்லும்
நரசிங்க னென்றே நவில்.

[இதன் பொருள்]—மாறுபாடில்லாத தமது அநுக்ரஹத்தினால், பெரிய கடலாற் சூழப்பட்ட இந்தப் பூமியில் அவதரித்து, தம்முடைய பெருமிதம் தோன்ற வீரக்ஷேத்ரமாகிய ஸ்ரீ சிங்கவெற் பென்னும் திருமலையில் எழுந்தருளியிருந்த எம்பெருமானுடைய திருநாமம் யாதெனில், பேசுவார் பேச்செல்லாம் தம்மொருவரையே ப்ரதிபாதிக்கும்படியாய், ஸர்வாந்தர்யாமி யாகவும் ஸர்வசப்த வாச்யனாகவும் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ நரசிங்கப் பெருமான் என்பது. அதையே கூறு என்பதாம்.

2. நாடு

சீருடைய மாநர சிங்கப் பெருந்தேவன்
பாரி லுகந்த பதிவினவில் — ஆரியரும்
மாரதரும் வாழ்ந்து மகிழ்ந்து சிறந்தொளிர்ந்த
பாரதநா டென்று பயில்.

[இ—ள்.]—தேவாதி தேவனும், அநந்த கல்யாண குணாகரனுமாகிற ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் இந்தப் பூமியில் தாம் எழுந்தருளியிருப்பதற்கு யோக்யமென்று திருவுள்ளம் பற்றிய தேசம் யாதென்று விசாரிக்கப் புகுந்தால், ஆரியர்களும், பார்த்தன் போன்ற பெரிய வீரர்களும், பண்டை நாளில் எம்பெருமானுடைய அநுக்ரஹத்தினால் சீரும் சிறப்புமாக வாழ்ந்தும் ஆநந்தித்தும் மிகவும் சிறப்புடையதாகச் செய்த பாரத வர்ஷம் என்னும் நாடே என்று அநுஸந்திக்கவும் என்பதாம்.

3. நகரம்

எங்கோ னரசிங்க னேழுலகுங் காக்குந்தன்
செங்கோன டாத்துந் திருநகரம் — சிங்கர்

புகழ்போ லுயர்ந்தொளிருந் பொன்வரையின் மீதே
திகழு மகோபலமாந் தேர்.

[இ-ள்]—எம்முடைய நாதனுகிய ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன், 'பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே யாள்கின்ற' தமது செங்கோல் செலுத்தும் திருநகரம் யாதெனில், ஸ்ரீ சிங்கப்பிரானுடைய புகழைப்போலவே தானும் உயர்ந்து, அதைப்போலவே தானும் ப்ரகாசியா நிற்கும் செம்பொன் வெற்பாகிய சிங்க வெற்பின் மீது விளங்கும் ஸ்ரீமதஹோபில க்ஷேத்ரம் என்று தேர் என்பதாம்,

4. ஆறு

முத்தர்களும் சூரிகளும் முப்போது மேத்துமெங்க
ளத்த னுகந்ததோ ராறுரைக்கில் — பத்தருடைப்
பாவ மகற்றும் பவநா சினியென்னுந்
தேவ நதியென்று செப்பு.

[இ-ள்]—நித்ய முக்தாநுஷக்தனைப் அவர்களால் முப்போதும் போற்றப் படுபவனும், பிதாவைப்போலவே ஹிதத்தையே செய்பவனுமாகிற எம்பெருமான் உகந்த நதியாவது யாதென்று சொல்லப் புகில், பக்தர்களுடைய பாவத்தைப் போக்க வல்லதும், பவநாசிநீ யென்னுந் திருநாமத்தை யுடையதுமான அப்ராக்ருதமான திருநதி யென்று சொல் என்பதாம்.

5. மலை

முன்மலைந்த பொன்பேர் முரணழித்த திண்டிறலோன்
நன்மலையே தென்று நனிவினவில் — கன்மலைவாழ்
தாழ்சடையன் றாமரையா னேயனையார் தாழ்சிங்க
வேழ்குன்ற மேயென் றுரை.

[இ-ள்]—முற்காலத்தில் தம்மோடெதிர்த்துப் போர்செய்த ஹிரண்யன் என்னும் பெயரையுடைய வலிய பகைவனை அழித்த, மிகுந்த பராக்ரமத்தோடு கூடிய எம்பெருமானுடைய சிறந்த மலையாவது யாதென்று கேட்பின், பாறைகளால் நிறைந்த கைலை மலையில் வஸிக்கும் சடைமுடியனாகிய பரமசிவனும், பகவானுடைய திருவுந்தித் தாமரையில் பிறந்த ப்ரஹ்மாவும், இன்னும் இந்திரனை யுள்ளிட்ட தேவர்களும் மற்றவர்களும் வணங்கி வழுபடும் சிங்கவேழ் குன்றம் என்னும் திருமலை யென்று சொல் என்பதாம்.

6. ஊர்தி

கார்திகழுஞ் செங்கமலக் கண்ண னுகந்தருளு
மூர்தி யுரைக்கி லுலகமெலா—மார்த்துலவுங்
காலுக்கு மேலாங் கதியுடைய புள்ளரையன்
கோலக் கருடனெனக் கூறு.

[இ-ள்]—புருஷார்த்தங்கள் எல்லாவற்றையும் காக்குங் கருத்தில்லாமல் வரையாது கொடுத்தருளும் வண்மையினுலும், ஆஹ்லாதகரத்வ ஸௌந்தரத்வ ஸ்ப்ருஹணீயத்வ தாபசமநத்வாத்யாகாரங்களாலும், உலகத்தை வாழ்விக்கும் சீர்மையினுலும், கண்ணுக்கினிய கருமை வண்ணத்தினுலும், மின்னுக்கொடி போலிலகும் திருமாமகளோடு இறைப்

பொழுதும் பிரிந்திராமையினலும், மலையின்மேல் தங்கினமையினுலும், சாதக பக்ஷிகளைப் போன்ற பரமைகாந்திகளுக்குத் தாரக போஷக போக்யங்களா யமைந்தமையினலும், கடலில் முகந்த ஜலத்தால் வ்ருத்தியடையும் மேகங்கள் போன்று திருப்பாற்கடல் தந்த அமுதத்துக்கும் அமுதமாகிய பெண்ணமுதத்தோ டிசைந்து ஸர்வோத்க்ருஷ்டமாக விளங்கினமையாலும், ஓர் காளமேகம் போன்று விளங்கும் செந்தாமரைக் கண்ணனகிய எம்பெருமான் உகந்த வாஹநமாவது யாதென உரைப்பின், உலகமெல்லாம் ஸஞ்சரிப்பதும், அவ்வாறு ஸஞ்சரிக்கும்போது ஒரு சப்தத்தோடு ஸஞ்சரிப்பதுமாகிய வாயுவைக் காட்டிலும் வேகமான கதியை யுடைய புள்ளரையனகிய அழகிய திருவடி நயினர் (கருடன்) என்று சொல் என்பதாம்.

7. படை

சிங்கப் பொருப்புடைய செல்வன் திருக்கரத்திற்
றங்கும் படைவரிசை தானுரைக்கில்—சங்கந்
திகிரியுஞ் சார்ங்கமுந் திண்கதையும் வாளு
முகிருமா மென்றே யுணர்.

[இ—ள்]—சிங்கவெற்புக் கிறைவனகிய செல்வனுடைய திருக்கரத்தில் தங்கி, ஆச்ரித ரக்ஷணத்துக்கும் துஷ்க்ருத் விநாசத்துக்குமாக அமைந்த திவ்யாயுதங்கள் யாவையென்று சொல்லப் புக்கால், அவை சங்கம், சக்ரம், கதை, சார்ங்கம், நந்தகம் என்று சொல்லப்படும் பஞ்சாயுதங்களும், அவற்றைக்காட்டில் விலக்ஷணமாய் ஸ்ரீ ந்ருஸிம்ஹனை அவதரித்த விடத்தில் அஸாதாரணமாகக் கொண்டுள்ள கூருகிரும் (நகங்களும்) ஆகும் என்று அறிந்துகொள் என்பதாம்.

8. முரசு

கரைசெயலுக் காகாக் கருணையுடன் காக்கும்
நரசிங்கத் தேவனர் நாடும்— முரசம்
வெற்றி தருந்தெய்வ வாழ்வுதரும் வேதமெனுங்
கொற்ற முரசமெனக் கூறு.

[இ—ள்]—அளவொன்றில்லாத தம்முடைய அபாரமான கருணையினல் வ்யாஜ மாத்ர ஸாபேக்ஷனய் உலகத்தை ரக்ஷித்தருளும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் என்னும் தேவர் பெருமான் ஆதரித்தருளிய முரசமாவது யாதெனில், ஐஹிகமான ஸர்வ ச்ரேயஸ்ஸுக்கும் ஸாதநமாய், தேவருலகத்தும், மனிசர்க்குத் தேவர்போலத் தேவர்க்கும் தேவனகிய திருமால் திருவடியில் வாய்ப்பதான கைங்கர்ய ஸாம்ராஜ்யத்திலும் முடி சூட்டும் பெற்றியதாய், ஒரு கொற்ற முரசம் அரசனுடைய கீர்த்திகளை முழங்குவதுபோல் எம்பெருமானுடைய த்ரைவிக்ரமாதி விஜய பரம்பரைகளை முழங்குவதுமாய் விளங்கும் வேத மென்னும் முரசம் என்று கூறு என்பதாம்.

9. தார்

காராருஞ் சிங்கக் கனவரையின் மீதொளிர்வான்
தாராவ தேதென்று தான்வினவிற்—சீராரு
மைந்தருவி னீழ லமரர்கோன் வந்திக்கும்
பைந்துளவத் தாரே பயில்.

[இ—ள்]—மேகமண்டலத்தை யளாவிய சிங்க வெற்பென்னும் ஓங்கும் மலையின் மீது, உதய கிரியின் மேல் ப்ரகாசிக்கும் சூரியனைப் போல் ப்ரகாசிப்பவனகிய எம்பெருமானுடைய மாலையாவது யாதென்று கேட்பின், எல்லாச் சிறப்புமுடைய மந்தாரம், பாரிஜாதம், ஸந்தாநம், கல்பவ்ருக்ஷம், ஹரிசந்தநம் என்னும் தேவ வ்ருக்ஷங்களின் நிழலில் மகிழும் தேவர்களுக்கு இந்த்ரனயிருப்பானும், தன்னுடைய தேவ வ்ருக்ஷங்களின் புஷ்பங்

களாலான மாலையைக் காட்டிலும் சிறப்புடைத்தானமையால் போற்றி செய்யும்படியான பசுந்துளவின் மாலை யென்று சொல் என்பதாம்.

10. கொடி

அடியார்கள் வாழ வணிதிகழும் மின்னுக்
கொடிபோன் மடவாளுங் கூடி—நெடுங்கலுழக்
குன்றத் தமர்ந்தான் கொடிவினவிற் கோலப்புள்
வென்றிக் கொடியெனத்தேர் மிக்கு.

[இ—ள்.]—தமது திருவடியை ஆச்ரயித்த பக்தர்கள் உஜ்ஜீவிக்கவும், மிகவும் அழகான மின்னற் கொடிபோலும் விளங்கும் பெரிய பிராட்டியோடுங் கூடி, மிகவும் விசாலமான காருட சைல மத்யத்தில் அமர்ந்த எம்பெருமா னுகந்த கொடி யாதென்று வினவில், அழகான கருடப் பக்ஷியின் உருவத்தைக் கொண்ட ஜயக் கொடி யென்று ஸந்தேக மறத் தெளிந்துகொள் என்பதாம்.

*　　*　　*　　*

ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ரர்.

ஜனங்கள் ஏராளமாகப் போய்க்கொண்டும் வந்துகொண்டும்தான் இருக்கிறார்கள். அவர்கள் நாவில் "கோவிந்தா! கோவிந்தா!" என்னும் மொழிகளைத் தவிர்த்து வேறொன்றையுங் காணோம். ஒரு வ்ருத்தர் மிகவும் தள்ளாடிக் கொண்டு மலையின்மேல் ஏறிக்கொண்டிருக்கிறார். "இன்னும் காளி கோபுரத்துக்கு எவ்வளவு தூரம் இருக்கிறது?' என்று கேட்டார் அந்த வ்ருத்தர், அங்கே ஒரு பாறையின் மீது உட்கார்ந்துகொண்டு சற்று இளைப்பாறிக் கொண்டிருந்த ஓர் இளைஞனை நோக்கி.

இளைஞன்—"இன்னும் ஒரு அரை க்ரோச தூர மிருக்கும்."

வ்ருத்தர்—"வழி நன்றாக இருக்கிறதா?"

இளைஞன்—"வழி இதுவரையில் வந்தது போலத்தான் இருக்கும். காடுகளில் வழி தெரிந்துகொண்டு போவது ச்ரமமாகத்தான் இருக்கும்."

வ்ருத்தர்—"நீரும் தனியாகத் தான் போகின்றீரோ?"

இளைஞன்—" இல்லை; இங்குத் தனியாகப் போவது மிகவும் சிரமம். என்னைச் சேர்ந்தவர்கள் கூப்பிடு தூரத்தில் முன்னே போகிறார்கள். மிகவும் களைப்பாக இருந்ததால், இளைப்பாறுவதற்காகச் சற்று உட்கார்ந்தேன்; இதோ போகிறேன்; நான் போய் வருகிறேன்" என்று கூறிக்கொண்டு அவ்விளைஞன் நடந்தான்.

தள்ளாத வயதில் அவ்விளைஞனோடு கூடச் செல்லவும் வ்ருத்தருக்கு முடியவில்லை. கூர்மையான பாறைகள் காலில் குத்தி, அங்கங்கே ரத்தம் பெருகிக்கொண் டிருந்தது. ச்ரமத்தைப் பொருள் செய்யாமல் கிழவர் ஏறத்தான் செய்தார். ஆனால் மனஸ்ஸினுடைய வேகத்தோடு சரீரமும் சென்றால் தானே! 'பழைய காலத்தில் மஹான்கள் திருமலையைப் பகவானுடைய வேறொரு சரீரமென் றெண்ணிக் கீழிருந்தே ஸேவித்தார்களே யன்றி மலைமேல் ஏறவில்லை என்பார்களே. இந்த ச்ரமத்தைக் கண்டுதான் அவர்கள் மலைமேல் ஏற

குகணாஜி வ-ரு-ஷம் கண்ரவ ஐ-வரி க-ணி தாரு திழ ।
வெஹொவகணஸம் ஹா தீஐ-க்ஷ வெகு-ணஸ ஹ-ஐ த்ஐ-வாஸெ ॥ 3 ॥

[ப—ரை] குகணும்-கழுத்து பர்யந்தம், குஜிவ-ரு-ஷம்—ஆதிபுருஷனென்று சொல்லப்படும் தனது அஸாதாரணமான ஸ்வரூபமும், உவரி—(அதற்கு) மேல், க-ணி தாரா திழ—தோற்கடிக்கப்பட்ட சத்ருக்களையுடைய, கண்ரவழ—ஸிம்ஹ ரூபமும், [இவ்விதம் அத்புதமான ரூபத்தையுடையவராயும்] 'வெஹொவகணஸம் ஹாக—வேகவதி என்னும் நதியின் ஸமீப ப்ரதேஶத்தின் சேர்க்கையால், வீஐ-க்ஷ வெகு-ணஸ ஹ-திழ— வைகுண்டத்திலுள்ள அபிமாநத்தைத் துறந்தவராயுமிருக்கும் [ந்ருஸிம்ஹனை], உவாஸெ—உபாஸிக்கிறேன்.

குகணழ—கழுத்து பர்யந்தம் என்றால், 'எது முதல்?' என்ற ஆகாங்க்ஷை உண்டாகு மன்றோ? 'திருவடி முதல் கழுத்து பர்யந்தம்' என்று தாத்பர்யம்.

குஜிவ-ரு-ஷழ—ந்ருஸிம்ஹாவதாரத்தில் கழுத்துக்குக் கீழே மநுஷ்யாக்ருதி என்று சொல்வதுண்டு. இவ்விடத்தில் கழுத்துக்குக் கீழே 'புருஷ' ரூப மென்றும், அதிலும் 'ஆதி புருஷ' ரூப மென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது, 'கழுத்துக்குக் கீழே கேவலம் மநுஷ்யாக்ருதி மாத்ரமன்று; அது அஸாதாரணமான புருஷாக்ருதியே' என்பது ஸ்ரீ தேசிகனுடைய திருவுள்ளமென்று க்ரஹிக்க ஹேது இருக்கிறது. 'புருஷன்' என்னும் சப்தம் பகவானுக்கே அஸாதாரணம்; அது அவனுடைய ஸ்வரூபத்தைக் குறிக்கும். 'வ-ரி ஸெதெ ஐதி வ-ரு-ஷஃ' என்பது அதன் வ்யுத்பத்தி. அதாவது: 'புரத்தில் சயநித்துக்கொண்டிருக்கிறவன்' என்று சொல்லப்பட்டதாகின்றது. அவனது புரம் எது என்றால், ஜகத்தில் தென்படும் ஸகல சேதந அசேதந பதார்த்தங்களுமே. அவை எல்லாவற்றிலும் அவன் உள்ப்ரவேசித்து நிற்கிறபடியால், அவனை அவைகளில் ஶயநித்துக்கொண்டிருப்பதாக வ்யவஹரிக்கிறார்கள்.

"ஹ-ஐதெ தஐ-ஒஹஜீய-ஒ ஐஉாஃ வ-ரொ விஹ- நி-ஒஐ-ஒாய ஶெதெ
யதஐ-ஷ- வ-ரு-ஷஃ"

[மஹத் முதல் ப்ருதிவீ முடிவான பூதங்களால் இந்த சரீரங்களை ஸ்ருஷ்டித்து, ஸ்வயம் அந்தந்த ஜீவனுக்குள் வ்யாபித்து நிற்கும் ஸ்வபாவத்தை உடையவனாக இருந்துகொண்டு, அந்த ஶரீரங்களாகிற பட்டணங்களில் அவன் ஶயநித்துக்கொண் டிருக்கிறபடியால் அவனுக்குப் 'புருஷன்' என்னும் சப்தத்தின் வாச்யத்வம்.] அந்த ஸ்வஸ்வரூபமே இவ்விடத்தில் விவக்ஷிதம்.

க-ணி தாரா திழ—'க-ணித' என்பதற்கு, 'பராஜயிக்கப்பட்ட' 'த்வம்ஸம் செய்யப்பட்ட' என்பது பொருள். அந்த ஸிம்ஹ ஸ்வரூபத்தைப் பார்த்தவுடன் ஶத்ருக்கள் எல்லோரும் த்வம்ஸம் செய்யப்பட்டவர்க ளாகிறார்கள் என்பது தாத்பர்யம்.

வெஹொவகணஸஜாக—வேகவதீ என்னும் நதியின் உபகண்டத்தின் ஸங்கத்தால். உபகண்டம் என்பதற்கு 'ஸமீபம்' என்பது பொருள். ஸ்ரீ பகவான் இந்த ப்ரதேசத்தை உவப்புடன் தனது அவதார ஸ்தலமாகத் திருவுள்ளம் பற்றினதற்குக் காரணம், அங்கு ப்ரவஹிக்கும் வேகவதீ என்னும் நதியின் ரமணீயதையே. வேகவதியின் அழகால் ஆகர்ஷிக்கப்பட்டு, அதை ப்ரீதியுடன் திருவுள்ளம் பற்றினான் என்பது த்வநி. அப்பொழுது 'வேகவதியின் ஸங்கத்தால்' என்று சொன்னால் போதாதோ? ஏன் 'வேகவதியின் ஸமீபத்தின் ஸங்கத்தால்' என்று சொல்லவேண்டும்?' என்று ஒரு சங்கை ஜநிக்கலாம். இப்படிச் சொல்வதற்குக் காரண மொன்று உண்டு. வேகவதி என்னும் நதி அவ்விடத்

ബஸ–உவிருஸ ஜஞோஃ஬ஃ ஸ–ஏவய–஫ ஜ஬ஸஏஃணீயழ ।
விஷஃவிஜொ அ ந஧ஃஃஸ ஸெஏவ஧ீ–஼ஃஸி ந஧ஸெஸிநஏஸிஂஹழ ॥ 4 ॥

தில் அந்தர்த்தாநத்தை அடைந்ததாக ஹஸ்திகிரி மாஹாத்ம்யத்திலிருந்து தெரிகிறது. அத ஞல் தான் அதன் ஸமீபத்தின் [அதாவது: அது அந்தர்த்தாநத்தை அடையாமல் பூர்ண ப்ரவாஹத்துடன் ப்ரவஹித்து வந்த விடத்தில்] என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஹஸ்தி கிரி மாஹாத்ம்யத்தில் பின் வருமாறு ஐதிஹ்யத்தைக் காணலாம். சதுர்முகன் யஜ்ஞம் செய்ய ஆரம்பித்த பொழுது, அஸுரர்கள் அதற்கு விக்நம் செய்யவேண்டு மென்னும் எண்ணத்துடன் உபாயத்தைத் தேடினர்கள். ப்ரஹ்மா தனது பத்நியாகிற ஸரஸ்வதியை அழையாமலே யாகம் செய்ய ஆரம்பித்ததை ஸரஸ்வதிக்குத் தெரிவித்து, அவளுக்குக் கோபத்தை உண்டு பண்ணி, அவளைக் கொண்டு யஜ்ஞத்தை விக்நம் செய்துவிடலாம் என்று நிர்ணயித்தார்கள். ஸரஸ்வதியிடம் போய் இந்த ஸமாசாரத்தைத் தெரிவிக்கவே அவளுக்குக் கோபம் ஜநித்தது. அவள் உடனே ஸஹ்ய பர்வதத்தின் உத்தர பாகத்தி லிருந்து மஹத்தான வேகத்துடன் ப்ரவஹித்து, ப்ரஹ்மா யாகம் செய்யுமிடத்தின் ஸமீபத் தில் போய்க் கர்ஜித்தாள். ப்ரஹ்மா பயந்து, யஜ்ஞத்தை ஸம்ரக்ஷிக்கவேண்டு மென்று பகவானை ப்ரார்த்தித்தார். பகவான் அந்த ப்ரார்த்தனைக்கு இணங்கி, யஜ்ஞ சாலைக்கு ஸமீபத்தில், அதற்கு மேற்குப் பாகமாகத் தனது சேஷ ஶயநத்தை விரித்து, அதில் சயநித்துக்கொண்டார். வேகமாகப் பெரு வெள்ளத்துடன் ப்ரவஹித்து வந்த ஸரஸ்வதீ, பகவான் சயநித்திருப்பதைப் பார்த்துத் தயங்கி நிற்கவே, பகவானல் நிருத்தமான அந்த ப்ரவாஹம் உடனே அந்தர்த்தாந மடைந்து, பல கிளைகளாகப் பிரிந்து ஸமுத்ரம் போய்ச் சேர்ந்தது. பகவான் சயநித்துக்கொண்டிருந்த ஸ்தலத்துக்குத் தென்பக்கமாக ப்ரவஹித்த கிளைக்கு 'வேகவதீ' என்று பெயர். இது தான் ஐதிஹ்யம். அந்தர்த்தாநத்தை அடைந்த வேகவதியுடன் ஸங்கம் செய்வது அநுபபந்ந மாதலால், அதற்கு மேற்கிலுள்ள ப்ரவாஹத்தை உத்தேசித்து 'உபகண்ட஁ஸம்ஶ்ராக' என்று அநுக்ரஹிக்கப்பட்டிருக்கிறது.

விஃ–க஭ெஸகஃணஸஹ–஫திழ— வேகவதியின் ஸங்கம் எப்படியிருந்த தென்றல், அது அவனுக்கு வைகுண்டத்தில் இருந்த அபிமாநத்தை மாற்றிவிட்டது. இவ் விடத்திலும் த்வநிக்கும் விசேஷார்த்தம் அவதாநிக்கத்தக்கது.

4. இவ்வாறு ஸ்துதித்து விட்டுத் தமக்கும் அவனுக்குமுள்ள ஸம்பந்த விசேஷத்தை அநுஸந்தாநம் செய்து, அதனல் தமக்கு உண்டாகும் ஆநந்தத்தை வெளியிடுகிருர்.

[ப—ரை] ஸவிருஸ ஜஞோஃ—ஸகல ஜந்துக்களுக்கும், ஬ஸ–ழ—பந்துவா யிருப்பவனுகவும், ஬ஸ–ஏ....ஃணீயழ—ரமணீயமான பர்யங்க பந்த மென்று சொல்லப்படும் ஆஸந விஶேஷத்தை அடைந்திருப்பதால் விலக்ஷணமான ஓர் அழகைப் பெற்றவனுகவும், விஷஃவிஜொ அ நழ—ஸமமில்லாத [அதாவது: இரட்டைப்படையா யிருக்கும் இரண்டு கண்களின்றிக்கே ஒற்றைப் படையா யிருக்கும் மூன்று கண்களை]யுடையவ னுகவும் இருக்கும், ஸெஏவ஧ீவ–ஸி ந ஸெஸி நஏஸிஂஹழ—வேகவதீ நதியிலுள்ள மணல் மேடுகளில் விஹரிக்கும் நரஸிம்ஹனை, ஸஂஸெ—ஸ்தோத்ரம் செய்கிறேன்.

ஸவிருஸ ஜஞோ ஬ஃஸ–ழ–ச்ருதிகள் பகவானை ஸகல ஜந்துக்களுக்கும் பந்துவாகச் சொல்கின்றன. லோகத்தில் நமக்குப் பரஸ்பரம் ஏற்படும் பந்துத்வம் கர்மமடி யாக ஏற்பட்டிருப்பதால், அதை ஸோபாதிக பந்துத்வம் என்று சொல்வார்கள். பகவா னுக்கும் நமக்குமுள்ள பந்துத்வமோ நிருபாதிகம். இந்த பந்துத்வம் ஒழிக்க ஒழியாது; எப்பொழுதும் உள்ளது. இன்னருக்குப் பந்து, இன்னருக்குப் பந்துவன்று என்பது கிடை யாது. ஸவெஷா ஜெவ ஜொகா நாஂ பிதா மாதா ச மாதவஃ '' அந்த பந்துத்வ ஸகலமும் விதமான தென்றும் ச்ருதி சொல்லுகிறது. இப்படிப்பட்ட பந்து ஒருவன்

ஸ்வஸ்தாநேஷு மருத்கணாந் நியமயந் ஸ்வாதீந ஸர்வேந்த்ரிய:
பர்யங்கஸ்திர தாரணா ப்ரகடித ப்ரத்யங்முகாவஸ்தித்: ।
ப்ராயேண ப்ரணிபேதுஷ: ப்ரபுரஸௌ யோகம் நிஜம் ஶிக்ஷயந்
காமாநாதநுதாமஶேஷஜகதாம் காமாஸிகா கேஸரீ ॥ 5 ॥

இருக்கிருனென்பதை நாம் அறியவில்லை. அதனுல் க்லேசப்படுகிறேம். அதை யறிந்து அவனிடத்தில் நாம் செய்யவேண்டிய ப்ரீதியைச் செய்யும் பக்ஷத்தில் நமக்கு க்லேச மென்பது ஏது!

பர்யங்கபந்த:—இது யோகிகளால் அவலம்பிக்கப்படும் ஓர் ஆஸநவிசேஷம். யோகிகள், தமது த்யாநத்தின் உறுதியை உத்தேசித்து அநேக ஆஸநங்களை எடுத்துக் கொள்வார்கள். அவைகளுள் ஒன்று இது. பகவான் ஒரு யோகீச்வரன்; ஆகையால் அவன் எடுத்துக் கொள்ளக் கூடாத ஆஸந மொன்றுமில்லை. இந்த ஆஸநத்தில் விசேஷம் ஒன்றுண்டு அதாவது: மேற்கு முகமாக இருப்பதுதான். வேகவதீ மேற்கிலிருந்து ப்ரவஹித்து வந்தபடியால் பகவான் மேற்கு முகமாக இருப்பதும் உபபந்நமே. சயநித்திருப்பதாக ப்ரஸ்தாவ மிருந்தாலும், பக்தர்களுக்குப் பர்யங்க பந்தத்துடன் எழுந்தருளி யிருப்பதாக ஸேவை ஸாதிக்கிருனென்று தெரிகிறது.

விஷம விலோசந:—இரட்டைப் படையான எண்களை ‘ஸமம்’ என்றும், ஒற்றைப் படையானவைகளை ‘விஷமம்’ என்றும் சொல்வதுண்டு. இவ்விடத்தில் ‘மூன்று கண்களையுடையவன்’ என்பது விவக்ஷிதம். கீழே, ஸூர்யன் சந்த்ரன் அக்நி ஆக மூன்றையும் கண்களாக உடையவன் என்று இரண்டாவது ச்லோகத்தில் சொல்லப் பட்டுள்ளதே, இவ்விடத்தில் ‘விஷம விலோசநன்’ என்பதால் சொல்லப்படுகிறது. இந்தப் பதத்திற்கு, **விஷம**—வேறுபட்ட வ்யாபாரங்களையுடைய, **விலோசந**—கண்களையுடையவன் என்று வேறோர் அர்த்தமும் சொல்லக் கூடும். அதாவது: ஆச்ரிதர் பக்கல் குளிர்ந்ததாகவும், விரோதிகள் பக்கல் க்ரூரமாகவும் உள்ள கண்களை யுடையவன் என்பது திரண்ட பொருள். பகவானுடைய கண்களுக்கு அம்மாதிரியான விஷம ஸ்வபாவமும் உண்டென்று பெரியோர்கள் சொல்லியிருக்கிருர்கள். ஹிரண்யாதிகளுக்கு க்ரூரத் தன்மையையும், ப்ரஹ்லாதாதிகளுக்கு மார்த்தவத்தையும் அவை வெளியிடவில்லையா? பகவானுடைய பராபிபவந ஸாமர்த்ய ரூபமான தேஜஸ்ஸைப் பற்றி விளக்குகையில், ஸ்ரீகூரேசன்,

“ நித்யாநபாய ஸுபுஜாநுபுஜாம் வரேஷா
உத்வேஜநம் ச தவ தேஜ உதாஹரந்தி ॥ ”

[பகவானுடைய தேஜஸ்ஸானது பக்தர்களுக்கு நிரந்தர போக்யமாகவும், சத்ருக்களுக்கு அதிமாத்ரம் உத்வேககரமாகவும் இருக்கின்றதென்று அதை அறிந்தவர்கள் சொல்லியிருக்கிருர்கள்] என்று அநுக்ரஹித்திருக்கிருர். ஆனல் இந்த வைஷம்யம் இவ்விடத்தில் ‘விஷம விலோசநம்’ என்பதால் குறிக்கப்படுகின்றதென்று சொல்வதைக் காட்டிலும், ‘முக்கண்ணன்’ என்பதால் ஏற்படும் வைஷம்யமே குறிக்கப்படுகின்றது என்று சொல்வதே ஸங்கத தரமாகும். யஜ்ஞத்திற்கு விக்நம் செய்யவேண்டும் என்னும் எண்ணத்துடன் வந்த ருத்ரன் முக்கண்ணனுகை இருந்தது போல, இவனும் முக்கண்ணனுகை இருந்தான் என்று ‘தவநேத்ர த்ரிநயந:’ என்று கீழே ப்ரஸ்தாவிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு ஸங்கதமாகவே இவ்விடத்தில் பொருள் கொள்கையே உசிதமாகும்.

புளிநகேளி—மணலில் விளையாடுவது சிறு குழந்தைகளுக்குப் போல மற்றவர்களுக்கும் ப்ரியமே. கீழே ‘உபகண்டஸங்க’ என்றும் ப்ரவாஹத்துடன் சேர்க்கை ப்ரஸ்தாவிக்கப் பட்டது. இவ்விடத்தில் ‘புளிந கேளி’ என்று அந்தர்வாஹிநி அவஸ்தையிலிருக்கும் வேகவதியுடன் ஸங்கம் ப்ரஸ்தாவிக்கப்படுகிறது. விளையாடும் ஸ்வபாவமுள்ளவன் ஒருவிதமான வ்யவஸ்தைக்கும் கட்டுப்படாமல் ஸ்வச்சந்தமாகவே விஹரிப்பானன்றே?

5. இந்த ச்லோகத்தால், கீழே விவரித்திருக்கிறபடி, பர்யங்க பந்தத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஸகல ஜகத்துக்கும் ஸகல புருஷார்த்தங்களையும் கொடுத்து எல்லாரையும் அநுக்ரஹிக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறார். இந்த ச்லோகத்தில் இரண்டு அர்த்தங்கள் தோன்றும்படி பதங்கள் ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு அர்த்தம் ஹிரண்யாஸுரவதத்தைப் பற்றியது; மற்றொன்று யோகாநுஷ்டாநத்தைப் பற்றியது. ஊ-ஓணாந ஸ்வஸ்வாதெநஷு நியமயந—என்பதற்கு, 'ஹிரண்யாஸுரனால் துரத்தப்பட்ட தேவதைகளைத் தங்கள் தங்கள் ஸ்தாநத்திற்குத் திருப்பிக் கொண்டு வந்து ஸ்தாபித்து' என்பது முதல் பக்ஷத்தில் தோன்றும் அர்த்தம். இரண்டாவது பக்ஷத்தில், யோகிகள் ப்ராணாபாநங்கள் முதலான வாயுக்களைத் தமது ப்ராணாயாமத்தால் அவ்வவற்றின் ஸ்தாநத்தில் நிறுத்தி' என்பது அர்த்தம், 'ஊ-ஓணாந' என்பதற்குத் தேவதைகளின் கூட்டமென்றும், வாயுக்களின் கூட்டமென்றும் இரண்டு விதமாகப் பொருள் கொள்ளக்கூடும். இம்மாதிரியே வேறு பதங்களிலும் விசேஷம் இருக்கிறது.

[ப—ரை] ஊ-ஓணாந—ப்ராணன் முதலிய வாயுக்களின் கூட்டங்களை [தேவர்களின் கூட்டங்களை], ஸ்வஸ்வாதெநஷு—தங்கள் தங்கள் ஸ்தாநத்தில், நியமயந—நியமநம் செய்துகொண்டு, [யோகம் செய்யாத காலங்களில் ப்ராணன் முதலிய வாயுக்கள் தங்கள் தங்கள் ஸ்தாநத்திலிருந்து நழுவி நிற்கும்; யோக காலங்களில், அவை ப்ராணாயாமத்தால் அடக்கப்பட்டு, தங்கள் தங்கள் ஸ்தாநத்தில் நிலைபெற்று நிற்கும். ஹிரண்யாஸுரனுடைய வத பக்ஷத்தில், அந்த அஸுரனால் நலிவு பெற்றுத் தேவதைகள் எல்லாரும் தம் தம் இடங்களை விட்டுவிட்டு ஓடி ஒளிந்து வஸித்துக்கொண்டிருந்தார்கள். ஸ்ரீ ந்ருஸிம்ஹன் அந்த அஸுரனை வதம் செய்தவுடன் அவர்கள் தங்கள் தங்கள் ஸ்தாநத்திற்குத் திருப்பிக் கொண்டுவரப் பெற்றார்கள் என்பது பொருள்.] ஸ்வாயீநஸவெஓஹி யஃ—ஸ்வாதீநம் செய்யப்பட்ட ஸகல இந்த்ரியங்களையும் உடையவனாய் [அலையும் ஸ்வபாவமுள்ள கண் காது மூக்கு முதலிய இந்த்ரியங்கள் ப்ராணாயாமத்தைச் சரிவரச் செய்தால் அடங்கி நிற்குமென்பது யோகிகளின் அநுபவம்.] வயஓ........ சுவஹி திஃ—பர்யங்க பந்தமென்று சொல்லப்படும் ஆஸந விசேஷத்தை ஆச்ரயித்து நிச்சலமாக இருப்பதாலே ப்ரத்யக்வஸ்துவாகிற ஆத்மாவைக் குறித்து நிற்கும் இருப்பை உடையவராயும், [ப்ராணாயாமத்தைச் சரிவரச் செய்து, அதனால் இந்த்ரியங்களை ஸ்வாதீநம் செய்துகொண்டால், ஆத்மவஸ்துவின் ஸாக்ஷாத்காரம் ஏற்படுமென்று யோகசாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.] 'வூநீஜூவ' என்பதற்கு 'மேற்கு முகம்' என்றும் ஒரு பொருள் உண்டு. ஹிரண்யாஸுரனை ஸ்ரீ ந்ருஸிம்ஹன், தனது துடையில் வைத்துக் கொண்டு, ஸாயங்காலத்தில் ஸூர்யாபிமுகமாயிருந்து அந்த அஸுரனை வதம் செய்தாரென்று புராணங்களின் சொல்லப்பட்டிருக்கிறது.] வூணிவெஉஷாம்—தன்னை ஆச்ரயிப்பவர்களுக்கு, நிஜம்யொஹம்—தன் விஷயமான யோகத்தை, [யோகத்தால் ஜீவாத்மாவின் ஸாக்ஷாத்காரமே ஏற்படுவதாயினும், அந்த அவஸ்தை வந்து விட்டால், பிறகு ஸம்ஸார ப்ராப்தி இராமல் பரமாத்ம ப்ராப்தி கிடைத்து விடுகிறபடியால், இவ்விடத்தில் இந்த யோகம் தன் விஷயமான யோக மென்று சொல்லப்பட்டிருக்கிறது.] வூயெண பிக்ஷயந—உபதேசிப்பவர்போல எழுந்தருளியிருப்பவராயுமிருக்கும், சுஸள—இந்த, வூஹுஃ—ப்ரபுவான [நியந்தாவான], காஊாஸிகாகெஸரீ—காமாஸிகை என்னும் க்ஷேத்ரத்தில் ஸேவை ஸாதிக்கும் ஸ்ரீ ந்ருஸிம்ஹன், சுபெஷ ஜஹதாழ—ஸகல ஜகத்துக்கும், காஊாந—இஷ்டங்களை, சூதநுதாக—கொடுக்கட்டும்.

வில்லேயோ?' என்று எண்ணுவார். அடுத்தாற்போல், "ஸ்ரீநிவாஸனை ஒரு தடவை கூட ஸேவிக்காமல் உயிர்விடும் பாபியின் ஜந்மம் நஷ்டமே" என்னும் ச்லோகம் ஞாபகத்திற்கு வரும். "இந்தத் திருவடியை ஸேவியுங்கள்; இதை ஸேவிப்பவருக்கு ஸம்ஸார ஸமுத்ரம் முழங்கால் ஆழந்தான்" என்று கூறுவார்போலும் ஒரு கையால் திருவடியைக் காட்டிக் கொண்டு, மற்றொன்றால் முழங்கால்களைத் தொட்டு நிற்கும் அந்த ஸௌந்தரமான உருவம் அவருடைய மனக் கண்ணுக் கெதிரே தோன்றி மறையும். உடனே உத்ஸாஹம் வரும். கொஞ்சதூரம் செல்வார். ஆயினும் தள்ளாத வயதல்லவா? மறுபடியும் களைப் புண்டாகும்.

உடனே சென்று ஸ்ரீநிவாஸனை ஸேவிக்க மனமோ துடிக்கிறது. பாதையோ ஸரியாக இல்லை. துணையோ கிடையாது. மிகவும் வ்ருத்தர். என்ன செய்வார்? பாபம்! மிகவும் தபித்தார். அவர் கண்களினின்றும் நீர் பெருகிற்று. "ஹே! தீந தயாளோ! தயாநிதே! ஸ்ரீநிவாஸா!' உம்மை ஸேவிக்க வருகிற இந்தப் பாபிக்கு இவ்வளவு ச்ரமம் கொடுக்கவேண்டுமோ?" என்றார். இந்த முறையீடு ஸ்ரீநிவாஸன் திருச்செவியில் விழுந்தது. வ்ருத்தர் மிகவும் கஷ்டப் பட்டுத்தான் ஸ்ரீநிவாஸனை ஸேவித்தார். ஆனால் அவரால் மற்றவர்களுக்கு ஸ்ரீநிவாஸனை ஸௌலபமாக ஸேவிக்க வழி யேற்பட்டது.

திருமலைமேல் ஸ்ரீநிவாஸனை மங்களாசாஸநம் செய்துவிட்டு, சிஷ்ய கோடிகளுடனே ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் ஒரு புறமாக எழுந்தருளியிருக்கிறார். அந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தியின் இடையே நம் வ்ருத்தரும் நிற்கின்றார். வ்ருத்தர், மார்க்கத்தில் தாம் பட்ட கஷ்டங்களை யெல்லாம் ஸ்ரீ ஜீயரிடம் விண்ணப்பித்தார். ஸ்ரீநிவாஸனும் ஸ்ரீஜீயருக்கு ஸேவை ஸாதித்தருளினார்.

"ஜீயரே! திருமலைக்கு நம்மை ஸேவிக்க வருகிறவர்கள் வழி சரியாக இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நீர் திருமலையின் மார்க்கத்தில் படிகளைக் கட்டி, அங்கங்கே இளைப்பாறுவதற்கு மண்டபங்களையும் கட்டிவையும்" என்று நியமித்தார் எம்பெருமான். திருப்பணி மிகவும் பெரியது தான். ஒருவராக இருந்து செய்யக் கூடியதுமில்லை. ஆனால் ஸ்ரீ ஜீயருடைய சிஷ்யர்களான அநேக தநிகர்கள் சேர்ந்து மிகவும் ச்ரம ஸாத்யமான இந்தத் திருப்பணியை ஸ்ரீ ஜீயர் நியமநத்தை மேற்கொண்டு அதிசீக்ரத்தில் செய்து முடித்தனர். இதனால் ஸ்ரீநிவாஸனுடைய திருவுள்ளம் மிகவும் உகப்படைந்தது என்று சொல்ல வேண்டுமோ? "ஜீயரே! நம்முடைய பரமபதத்துக்குத் தேசிகன் க்ரந்த ரூபமாய் ஸோபாநங் கட்டினார். நீர் நம்முடைய திருமலைக்கு ஸோபாநம் கட்டினீர். உம்முடைய அபிமாநம் பெற்றவர்களுக்கெல்லாம் நாம் பரமபதம் கொடுப்போம்" என்று ஸ்ரீநிவாஸன் அநுக்ரஹித்தருளினார்.

ஸ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோ(அ)நந்த: ப்ரதிதஸ்ய தத்வாநுவிதாம் ப்ரபந்நாநாம்
ஸஞ்ஜீவயத்யதிரஸக்தியுத: ஸ்வயாந்ந ।
அந்யாம்ஶ்ச ஸ்தவசரணப்ரவணஸ்வபாவாந்
ப்ராணாதிகோ பகவதே பரமேஷ்டிநே தஸ்மை ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

லோகத்தில் ப்ரிய ஜநங்களின் வியோகத்தைப் பெற்று அதனுல் வருந்தும் பாக்யஹீநர்கள் பலருண்டு. அவர்கள், அந்த ப்ரிய ஜநங்களின் முகச்சாயை முதலியவற்றை அடைந்திருக்கும் வேறு ஜநங்களைப் பார்த்து அதனுல் ஸ்வல்ப ஆச்வாஸ மடைவதும், அந்த ப்ரிய ஜநங்களைப்போலப் படம் எழுதி அதைப் பார்த்து ஸுகம் அநுபவிப்பதும், அந்த ப்ரிய ஜனங்களை ஸ்வப்நத்தில் கண்டு களிப்பதும், அந்த ப்ரிய ஜநங்களுடைய தேஹ ஸம்பந்தம் பெற்ற வஸ்துக்களை ஸ்பர்சித்து அந்த ஸபர்சத்தால் ஒருவித நிர்வ்ருதியை அநுபவிப்பதும், இவை முதலிய வ்யாபாரங்களால் தமது க்லேசத்தை ஒருவாறு சமநம் செய்து கொள்ளுகிறுர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ",தாம் ஸ்ப்ருஷ்ட்வா மாமபி ஸ்ப்ருஶ" என்று, ஸீதாப்பிராட்டியின் வியோகத்தால் க்லேசப்பட்டுக்கொண்டிருந்த ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் அசேதநமான காற்றைப் பார்த்து, "ஹே காற்றே! ஸீதையைத் தொட்டு என்னையும் தொடு" என்று விலபித்தான். இந்த சோகத்தின் வேகத்தை அறிந்தவர்கள் இதைப்பற்றிப் பின்வருமாறு விஸ்தரித்துப் பேசியிருக்கிறுர்கள். "வியோகே ஆயோகே ப்ரியஜநஸத்ருக்ஷாநுபவந ஸுகஸ்யாம்ஶம் கஞ்சித் ஸ்வஜநஸமயே ஜீவயதி ; தத்ஸம்ஸ்ப்ருஷ்டாநாம் அபி ச ஸ்பர்ஶநைரபி ப்ரதீகாரா: காலம் வ்யதிகமயதி நாம் கோ(அ)பி ரஸித: ॥ "

தர்மத்தின் பரிபவம்

மஹாகவி காளி தாஸனும் "ஸாத்ருஶ்யப்ரதிக்ருதிதர்ஶநை: ப்ரியாயா: ஸ்வப்நேஷு க்ஷணிகஸமாகமோத்ஸவைஶ்ச" என்று அஜன் தன் ப்ரியதமையாகிற இந்துமதியின் வியோகம் நேர்ந்தபொழுது இப்மாதிரி ஆச்வாஸத்தைத் தேடிக் கொண்டிருந்தான் என்று வர்ணித்திருக்கிறுன்.

நமது தேசத்தில் பகவத் விஷயத்தில் கீழே விவரித்திருக்கும் ப்ரகாரம் ஒருவித அநுஷ்டாநத்தைப் பகவத் பக்தர்களென்று வ்யவஹரிக்கப்படும் ஸாது ஜநங்களிடம் நாம் பார்க்கிறோம். அவர்கள் ஸர்வேச்வரனையே ஸகலவித பந்துவாகப் பாவிக்கும் மநோபாவ முள்ளவர்கள். குணவத் புத்ரன் ஆப்த ஸுஹ்ருத் எல்லாரும் அவர்களுக்கு அவனே. அவனை ஸாக்ஷாத்கரிக்கவேணு மென்னும் ஆசை அவர்களுக்கு அளவற்றது. 'காணுமாறருளாய்,' 'ஒரு நாள் காண வாராய்'. 'கதா நு ஸாக்ஷாத்கரவாணி சக்ஷுஷா' என்று பலவாறு அவர்கள் கதறியிருப்பது அவர்களுடைய க்ரந்தங்களிலிருந்து தெரிகின்றது. ஆனுல், அவன் மாம்ஸக் கண்களுக்குக் கோசர னன்றுகையால், அவர்கள் அவனைக்

காணப்பெறவில்லை. கீழே விவரித்திருக்கிறபடி அந்த துக்கத்திற்குப் ப்ரதீகாரமாகவோ அல்லது வேறு காரணங்களாலோ அவர்கள் அந்த ஸர்வேச்வரனுடைய ப்ரதிக்ருதி ஒன்றை நிர்மாணம் செய்து அதை ஸேவிப்பது, அதை ஆராதிப்பது, அதற்கு உத்ஸவங்களைச் செய்வது, இம்மாதிரியான வ்யாபாரங்களால் அவனை விட்டுப் பிரிந்திருக்கும் துக்கத்தை மறந்து ஆநந்தம் அநுபவித்து வருகிறார்கள். இந்த அநுபவம் பிறர் ஒருவருக்கும் ஒருவித தீமையையும் விளைவிக்காத அநுபவம். இதை ஸஹியாத சிலர், இப்பொழுது இந்த அநுபவத்தை அநுபவிக்க வொட்டாமல் அவர்களைத் தடுத்துவிட்டார்கள். அதிமாத்ரம் ப்ரியமான க்ரீடா வஸ்துவைப் பறிகொடுத்த ஶிஶுக்கள்போல அந்த ஸாதுக்கள் இதை இழந்து தபிக்கிறார்கள். அவர்கள் அசேதநம்போல இருக்கும் அந்த ப்ரதிமைகளிடம் ஒரு ஸ்நேஹபாவத்தைச் செய்து, அதனால் தாங்கள் பரமாநந்தத்தை அநுபவித்து வந்தார்கள். அது ப்ரம ஜந்யமாக இருந்தாலும் அதனால் அவர்கள் அநுபவித்த நிர்வ்ருதி பொய்யன்றே. அநவத்யமான அந்த அநுபவத்தைக் கெடுப்பது பெருத்த ஒரு பாபமன்றோ?

இந்த அநுபவத்தை ப்ரமத்தால் உண்டானதென்று சொல்வதும் சரியன்று. விஷயங்களை விளக்கும் ப்ரமாணங்களுள் ப்ரத்யக்ஷம் ப்ரமாணமாவதுபோல, ஶாஸ்த்ரமும் ஒரு ப்ரமாணம். அதீந்த்ரியங்களாகச் சில விஷயங்கள் உண்டென்பது உண்மையானால் அவைகளை நிரூபித்து அறிவதற்கு ஶாஸ்த்ரமே ப்ரமாணமாக வேண்டும். ஸர்வேச்வரன் அதீந்த்ரியனானதால், அவனை அறிவதற்கு இந்த ஸாதுக்கள் ஶாஸ்த்ரத்தையே நம்புகிறார்கள். அந்த ஶாஸ்த்ரங்களில் தைவத்தினிடம் ப்ரீதி செய்யும் பக்தர்கள், அந்தத் தைவம்போல ஒரு ப்ரதிமையைச் செய்து, அதற்கு மந்த்ரவத்தாகப் ப்ரதிஷ்டை என்னும் க்ரியையைச் செய்தால் அந்த ப்ரதிமையில் பகவான் ஸாந்நித்யத்தைச் செய்கிறானென்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதை நம்பியே இந்தப் பக்தர்கள் அம்மாதிரி அநுஷ்டானத்தில் ப்ரவர்த்திக்கின்றார்களே ஒழிய, கேவலம் அவர்கள் ப்ரமத்தால் ப்ரவர்த்திக்கவில்லை. இம்மாதிரி கார்யங்களெல்லாம் சிற்சில நியமங்களுடன் செய்யப்படவேண்டுமென்றும் ஶாஸ்த்ரம் சொல்லுகின்றது. அவற்றுக்குப் பயந்து அவர்கள் அம்மாதிரி சில நியமங்களுக்குத் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இதைத் தடுக்கும் லௌகிகர்கள், தாமும் தமக்கு விதிக்கப்பட்டுள்ள நியமங்களுடன் அந்த அநுஷ்டானத்தில் சேரும்பக்ஷத்தில் தங்களுக்கும் பெருத்த க்ஷேமங்கள் உண்டு என்பதை அறியவில்லை. அப்படிப்பட்ட க்ஷேமத்தைத் தாமும் இழந்து, பிறருக்கு எவ்வித கெடுதலையும் விளைவிக்காமல் தமது மநஸ்ஸுக்கு ஒருவித நிர்வ்ருதியைத் தேடிக்கொள்ளும் ஸாதுஜநங்களுக்கு மஹத்தான க்லேஶத்தையும் விளைவித்துக்கொண்டு, இந்த லௌகிகர்கள் என்ன லாபம் பெறப்போகிறார்களோ நமக்குத் தெரியவில்லை.

“𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑌤𑍍𑌯𑌸𑌨𑍍𑌧𑌶𑍍𑌚 𑌰𑌾𑌮𑍋 𑌦𑌾𑌶𑌰𑌥𑌿𑌰𑍍𑌯𑌦𑌿 ।
𑌪𑍌𑌰𑍁𑌷𑍇 𑌚𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌸𑍍𑌤𑌦𑍈𑌨𑌂 𑌜𑌹𑌿 𑌰𑌾𑌵𑌣𑌿𑌮𑍍 ॥”

என்று லக்ஷ்மணன் சபதம் செய்ததுபோல நாமும் கதறுவோம்.

* * * *

நமது பாடசாலையிலிருந்து ஸர்வகலாசாலை (யூனிவர்ஸிடி) பரீக்ஷைக்குப் போன வித்யார்த்திகள் சென்ற வர்ஷங்களிற்போல இவ்வர்ஷத்திலும் ஸித்தார்த்தர்களாக வெளிவந்திருக்கிறார்கள் என்னும் ஸந்தோஷ ஸமாசாரத்தை ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதியில் இது வழியாக நாம் விண்ணப்பித்துக்கொள்ளத் துணிகின்றோம். இது, ப்ரவசந கர்த்தாக்கள் தமது தர்மத்தை ச்ரத்தையுடன் நிர்வஹித்து வருகிறார்கள் என்பதற்கு ஸூசகம். இந்த விஷயத்தில் நாம் அவர்களிடம் க்ருதஜ்ஞர்களாக இருக்கிறோம். இந்த க்ருதஜ்ஞதாவிஷ்கரணம் தங்களுக்குத் த்ருப்திகரமேயாயினும், இந்தத் துர்பிக்ஷ காலத்தில் குடும்ப நிர்வாஹ விஷயமாகத் தமக்கு ஜநிக்கும் ச்ரமத்திற்கு இது ஒரு பரிஹாரத்தையும் செய்ய ஶக்தமன்றே; இந்த வாசிக ஆவிஷ்கரணத்துடன் ச்ரமதக்ஷிணை விஷயத்திலும் கொஞ்சம் ஸஹாயம் செய்து கொடுத்தால், அது தங்களுடைய கஷ்டத்தை நிவாரணம் செய்யுமென்று அந்த ப்ரவசந கர்த்தாக்கள் நினைக்கக் கூடும். இந்த நினைவை ந்யாயத்திற்கு விருத்தமென்று நாம் சொல்லமாட்டோம். வேதந விஷயத்திலும் தமது த்ருப்தியைக் காண்பிக்கவேண்டுமென்னும் எண்ணம் பாடசாலையின் அதிகாரிகளுக்கு உண்டு. ஆனால் கால தேச ஸௌகர்யத்தை அவர்கள் ப்ரதீக்ஷித்திருக்கிறார்கள். அது ஒத்து வந்தவுடன் இஷ்டபூர்த்தி ஸம்பவிக்கும் என்பது நமது நம்பிக்கை.

ஸமஸ்க்ருத பாடசாலைகளின் சீர்திருத்தம்

இம்மாதிரி பாடசாலை விஷயமாக நாம் விசாரிக்கவேண்டிய விஷயம் மற்றுமொன்று உண்டு. அதாவது :— இதை ஸ்தாபித்து நடத்திவருபவர்களின் லக்ஷ்ய மென்னவென்பதுதான். ஸம்ஸ்க்ருதம் தமிழ் முதலிய பாஷைகளில் நமது சிறுவர்களுக்கு வ்யுத்பத்தியை உண்டுபண்ணி, அதுவழியாக வேதாந்த ஶாஸ்த்ரத்தை நமது ஸமூஹத்தில் வளரச் செய்யவேண்டுமென்பதுதான் முக்யமான லக்ஷ்யம். வ்ருத்தி கார்ச்யத்தால் கஷ்டப்படுபவர்களுக்கு ஒரு ஜீவனோபாயத்தை ஏற்படுத்த வேணுமென்பதும் லக்ஷ்யமாகவேண்டுமென்பதும் அவர்களுடைய எண்ணமென்றும் சொல்லலாம். நமது ஶாஸ்த்ரத்தில் ஜனங்கள் அவலம்பிக்கவேண்டிய ஜீவனோபாயங்கள் அந்தந்த ஜனங்களின் ஜாதிக்கு அநுகுணமாக வகுத்து விவரிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி வகுத்ததில் ப்ராஹ்மண ஜாதிக்கு அத்யாபநம் ஒரு ப்ரதாந பாகமாக ப்ராப்தமாயிற்று. இவ்விடத்தில் அத்யாபநமென்பது வேதத்தை அத்யயநம் செய்துவைப்பது என்பதற்கு மாத்ரம் வாசகமன்று; அது வித்யாந்தரங்களின் உபதேசத்தையும் குறிக்கின்றதென்று அநுஷ்டாநத்திலிருந்து நாம் அறிகிறோம். ஆகையால் ப்ராஹ்மண தர்மத்திலிருந்து நழுவாமல் ஜீவித்து வரவேண்டுமென்று எண்ணம்கொண்டிருக்கும் ப்ராஹ்மணர்கள், ஸம்ஸ்க்ருதம் தமிழ் முதலிய ஸ்வபாஷையை அப்யஸித்து, அந்தப் பாஷையில் எழுதப்பட்டுள்ள க்ரந்தங்களை அபேக்ஷிக்கிறவர்களுக்கு உபதேசித்து ஜீவித்து வருகிறார்கள். அத்யாத்ம ஶாஸ்த்ரத்தை அப்யஸித்து அதனால் ஆத்ம ச்ரேயஸ்ஸின் ஸம்பாதநத்திற்கு உதவுவதுபோல, ஒருவித ஜீவனோபாயமுமின்றிக்கே குடும்ப போஷணத்தைச் செய்வதற்குச் சக்தியற்றவர்களுக்கு ஒரு ஜீவனோபாயத்தை ஏற்படுத்திக்

கொடுப்பதும் பெரியதொரு தர்மமே. பாடசாலைகளில் படித்து ஜ்ஞாநத்தை ஸம்பாதித்துக்கொண்டிருக்கும் வித்வான்களுள் அநேகர், பாஷாந்தர பாடசாலைகளில் ஆஸ்பதங்களைப் பெற்று வ்ருத்தி கார்ச்யத்தால் ஏற்படும் ச்ரமத்தைப் பரிஹரித்துக்கொண்டிருப்பதை நாம் அறிவோம். ஆனால், அம்மாதிரி ஸ்தாநங்கள் மிகவும் மிதங்களே. ஏற்கெனவே ஜ்ஞாநத்தை ஸம்பாதித்துக்கொண்டிருந்த வித்வான்களுக்கே அவை பர்யாப்தங்களாய் இருந்தன. இப்பொழுது அம்மாதிரி ஸ்தாநங்கள் ம்ருக்யங்களாகிவிட்டன. ஸமீப காலத்தில் ஶிரோமணி வித்வான் முதலிய பரீக்ஷைகளில் தேறினவர்களுள் பலர் அலப்தாஸ்பதர்களாய் ச்ரமப்படுகிறார்கள். அவர்களுடைய கஷ்டத்தை நிவர்த்திக்க வேண்டுமானால், அவர்களுக்கு ஜீவநத்திற்கு ஸாதகமாயிருக்கும் ஒரு தொழிலையும் கற்றுக்கொடுக்கவேண்டும். அத்யாத்ம ஶாஸ்த்ரத்தின் அப்யாஸத்திற்கு அர்ஹதையை உண்டுபண்ணுவதே நமது ப்ரதாந லக்ஷ்யமானதால், அதற்கு அவிருத்தமாக ஒரு லௌகிக வ்யாபாரத்திற்கு அர்ஹதையையும் ஸம்பாதித்துக் கொடுப்பது தர்மமாகு மென்பதே நமது த்ருடமான நம்பிக்கை. கால தேஶ ஸ்திதியை அநுஸரித்து நமது வித்யார்த்திகளுக்குத் தாத்காலிக ராஜபாஷையில் ஜ்ஞாநத்தைப் புகட்ட வேண்டும். லௌகிக வ்யாபாரங்களின் பரிசயத்தையும் செய்விக்கவேண்டும். இன்னும் இவைபோன்ற வேறு யோக்யதைகளையும் ஸம்பாதித்துக் கொடுத்தால், அது அவர்களுக்கு வஸ்த்ராதி த்ரவ்ய ஸம்பாதநத்திற்கு உபயுக்தமாக இருக்கும். இவை ஒன்றுமின்றிக்கே, கேவலம் ஶாஸ்த்ர ஜ்ஞாநத்தை மாத்ரம் ஸம்பாதித்துக் கொண்டிருப்பவர்கள் தம்மீது குடும்ப போஷண பாரம் உறைக்கும் காலம் ஸம்பவிக்கும் பொழுது, ஜலத்தை விட்டு வெளியில் உத்த்ருதங்களான மத்ஸ்யங்களைப்போலத் துடிக்கிறார்கள். இவர்களுடைய தாரித்ர்யத்தை நிவர்த்தித்து அவர்களுடைய ஶிஶுக்களுக்கு அந்நம் கிடைக்குமாறு ஸம்விதாநத்தைச் செய்வது ஸ்ரீ ஶரண்யனுடைய திருவுள்ளத்திற்கு உகப்பாக இருக்குமே ஒழிய, அது நிக்ரஹ ஹேதுவாகமாட்டாது. இந்த உபகாரத்தை சோதநா லக்ஷண ரூபமான தர்மத்திற்கு ஒத்துவரவில்லை என்றும், ஆகையால் மடாதிபதிகள் மடத்தின் சொத்தை இதில் செலவிடக் கூடாதென்றும், அப்படிச் செலவிட்டால் அது அதர்மமே ஆகுமென்றும் சில வைதிகர்கள் ஆக்ஷேபிப்பதை நாம் அறிவோம். தீநர்களுடையைதைந்யத்தை நிவர்த்திப்பது அதர்மமாகுமோ?.

“𑌨 𑌕𑌾𑌮𑌯𑍇𑌽𑌹𑌂 𑌗𑌤𑌿𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌾𑌮𑌷𑍍𑌟𑌰𑍍𑌦𑍍𑌧𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌮𑌪𑌨𑍁𑌰𑍍𑌭𑌵𑌂 𑌵𑌾 ।
𑌆𑌰𑍍𑌤𑌿𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇𑌽𑌖𑌿𑌲𑌦𑍇𑌹𑌭𑌾𑌜𑌾𑌮𑌨𑍍𑌤𑌃𑌸𑍍𑌥𑌿𑌤𑍋 𑌯𑍇𑌨 𑌭𑌵𑌨𑍍𑌤𑍍𑌯𑌦𑍁𑌃𑌖𑌾𑌃 ॥

[நான் பரகதியையோ வேறு ச்ரேயஸ்ஸையோ அபேக்ஷிக்கவில்லை. தீநர்களுக்கு ஸம்பவிக்கும் கஷ்டங்கள் முழுவதும் என்னிடம் வரவேண்டு மென்பதே என்னுடைய ப்ரார்த்தனை. அதனால் அந்தத் தீநர்கள் தமது கஷ்டங்களிலிருந்து நிவ்ருத்தி அடைவார்களன்றோ ?] என்னும் ரந்திதேவனுடைய வார்த்தை நிரர்த்தகமாகுமோ?

189234

Regd. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற

கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

		சந்தாதாரர்களுக்கு ரூ. அ	மற்றவர்கட்கு ரூ. அ.
1.	ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8	7—8
2.	உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0–12	1—0
3.	உக்தி நிஷ்டாபரணோத்யோதம் ,,	0—8	0–12
4.	வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் (க்ரந்த லிபி)	... 1—0	1—8
5.	ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி)	... 0—8	0–12
6.	ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3	0—4
7.	ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0	3—0
8.	ஈஸாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழி பெயர்ப்புடன், 160 பக்கம்)	. 1—0	1—8

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள்:—

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், சென்னை.

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Edited and Published by S. Vasudevachariar, 5, Ramaswami Street, Tyagarayanagar, Madras.